
Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

SATURDAY, JUNE 26, 2021

சனிக்கிழமை ஜூன் 26, 2021 | ஒளி: 07 கதிர்: 32 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE



# பங்காளிகளின் பற்களை பிடுங்க மந்திராலோசனை?

- அதிர்கிறது கொழும்பு அரசியல்
- எம்.பியாகி அமைச்சராகிறார் பசில்
- விமல், கம்மன்பிலவுக்கு சிக்கல்
- அடுத்தடுத்த தேர்தலுக்காக காய் நகர்த்தும் முதற்படி

ஆளும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சிக்கும் அதன் பங்காளிக் கட்சிகள் சிலவற்றுக்கும் இடையில் ஏற்பட்டிருந்த கருத்து முரண்பாடுகள் நீண்டுகொண்டே செல்வதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பங்காளிகள் சில, தாம் கொண்டிருக்கும் நிலைப்பாட்டில் உடும்புப்பிடியாக இருப்பதால், மாற்று வழியைப் பயன்படுத்துவதற்கு அரசாங்கத்தின் முக்கியஸ்தர்கள் ஆலோசித்துள்ளனர் என அறியமுடிகின்றது.

அதன் முதற்கட்டமாக, முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்‌ஷவை, தேசிய பட்டியலின் ஊடாக, பாராளுமன்றத்துக்குள் கொண்டுவந்து, அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சிறிய விடுமுறையில் அமெரிக்காவுக்குச் சென்றிருந்த பசில் ராஜபக்‌ஷ, நேற்று முன்தினம் (24) நாடு திரும்பினார்.

தொடர்ச்சி P2

# 260 கைதிகளின் தண்டனையை தளர்த்த பரிந்துரை முன்வைப்பு



மரண தண்டனை கைதிகள் 260 பேரின் தண்டனையை ஆயுள் தண்டனையாக தளர்த்துவதற்கான பரிந்துரை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சிறைக் கைதிகளின் பெயர்ப்பட்டியல் நீதி அமைச்சரினூடாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என சிறைச்சாலைகள் முகாமைத்துவம்,

தொடர்ச்சி P2

# இராஜாங்க சி.சி.டி.வி சிக்கல் கொடுக்கிறதாம்

இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரனின் மெய்ப்பாதுகாவலரால், மணல் லொறியின் சாரதியான மகாலிங்கம் பாலசுந்தரம், ஜூன் 21ஆம் திகதி மாலை 5.30 மணியளவில் சுட்டுப்படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் பல கோணங்களிலும் விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன என பாதுகாப்புத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2



# யாழ்., மன்னார், புத்தளத்தில் சில பகுதிகள் முடக்கம்


30 மணித்தியால பயணக் கட்டுப்பாடுகள் நேற்றுக் காலை தளர்த்தப்பட்டிருந்த நிலையில், யாழ்ப்பாணம், மன்னார், புத்தளத்தில் நேற்றும் (25) சில பகுதிகள் முடக்கப்பட்டுள்ளன.

இதன்படி, யாழ்ப்பாணம் - கரணவாய் கிராமசேவகர் பிரிவிலுள்ள பகுதியொன்றில் எழுமாற்றாக 133 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் 15 பேருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதியானதையடுத்து, அப்பகுதி, நேற்றுக் காலை முதல் முடக்கப்பட்டுள்ளது

அங்கு, சுமார் 400 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் ஆயிரம் பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

# சமிக்ஞை காட்டிய குரங்கு; கடுப்பான இளம் ஆசிரியை



கொரோனா வைரஸ் தொற்றின் காரணமாக, பாடசாலைகள் யாவும் மறு அறிவித்தல் வரையிலும் மூடப்பட்டுள்ளமை யாவரும் அறிந்ததாகும்.

இந்நிலையில், பெரும்பாலான பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்,

தொடர்ச்சி P2

# பதுக்கிய உரத்தால் இராகலையில் பதற்றம்

ஆ.ரமேஸ்

உரத்தைப் பதுக்கி வைத்து, அதைக் கூடுதலான விலைக்கு விற்பனை செய்த இராகலை டெல்மார் பகுதியைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவரை, இராகலை பொலிஸார், நேற்று (25) காலை கைது செய்துள்ளனர்.

சந்தேகநபரான அந்த வர்த்தகர், தனது வீட்டிலும் கடையிலும் களஞ்சியசாலையிலும் இரசாயன உர வகைகளைப் பதுக்கி வைத்திருந்துள்ளார்.

தொடர்ச்சி P2





# இராணுவ ட்ரக் பாய்ந்ததில் இருவர் பலி; நால்வர் காயம்

## கறுத்தப்பாலத்தில் சோகம்: ஆற்றுக்குள் தாவியது வாகனம்

கனகராசா சரவணன்

மட்டக்களப்பு, செங்கலடி- கறுத்தப்பாலத்தில் இராணுவ ட்ரக் வாகனமொன்று, வீதியை விட்டுவிலகி பாலத்துக்கு கீழே குப்புற விழுந்து, நேற்று (25) வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு விபத்துக்கு உள்ளாகியுள்ளது.

இந்த அனர்த்தத்தில் இராணுவத்தினர் இருவர் மரணமடைந்துள்ளனர். மேலும், நால்வர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்த ஏறாவூர் பொலிஸார், ஒருவரின் சடலத்தைத் தேடி வருவதாகவும் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

## உள்ளே


03. 'திறக்காத கதவுகள்'

03. துரத்தும் பூதம்

04. திருடனாய் பார்த்து திருந்தாவிடின்

04. 'தோர்' மீண்டது 'ஷீனா' சிக்கியது

05. பயங்கரவாத எதிர்ப்பு அடிப்படைவாதமா?

05. பணியிட துன்புறுத்தல்கள்

07. சரிகள் பிழைகளாகின்றன

07. கொரோனாவை உணர்ந்த 'யூட்'

08. 'ஏனைய அரசியல் கைதிகளையும் விரைந்து விடுவியுங்கள்'


# 'இலங்கை தமிழ் அரசியலில் திருப்புமுனை'

## சுரேன் எம்.பி தெரிவிப்பு



இலங்கை தமிழ் அரசியலில் நேற்று முன்தினம் (24) திருப்புமுனை ஏற்பட்டதெனத் தெரிவித்த ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி சுரேன் ராகவன், "இந்த விடயம் தொடர்பில், இப்போதாவது ஒட்டு மொத்தத் தமிழ் மக்களும் தமிழ் அரசியலைப்பற்றி கரிசனையுடையவர்களும் மகிழ்ச்சியடைய வேண்டும்" என்றார்.

பத்தரமுல்லையிலுள்ள ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று (25) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



# வீதியால் செல்வோரை துரத்தி துரத்தித் தாக்கும் காகங்கள்

எம்.றொசாந்த்

வீதியால் பயணிப்போரை கருங்குளவிகள், காகங்கள் என்பன துரத்தித் தாக்குவதாகவும், அதனால் குறித்த வீதியால் தாம் செல்ல அச்சம் கொண்டுள்ளதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம், சாவகச்சேரி - தனங்களப்பு வீதியிலேயே இச்சம்பவம் இடம்பெற்று வருகின்றது.

தொடர்ச்சி P2

# யாழில் விடுதி முற்றுகை; 2 பெண்களுடன் அறுவர் கைது

எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம், நல்லூர் கோவில் வீதியில் கலாசார சீரழிவு நடவடிக்கைகள் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்ட விடுதியொன்று முற்றுகையிடப்பட்டு, இரண்டு இளம் பெண்கள், 3 இளைஞர்கள், விடுதி உரிமையாளர் ஆகிய 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2






# கிளிநொச்சியில் தடுப்பூசி பெற்ற 48 பேருக்கு திடீர் பாதிப்பு

## நேற்று முன்தினம் தடுப்பூசி செலுத்திக் கொண்டோரே பாதிப்பு

சுப்ரமணியம் பாஸ்கரன்

கொவிட் 19 தடுப்பூசி பெற்றுக்கொண்ட கிளிநொச்சி ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள் பெருமளவானோருக்கு திடீர் உடல் நலப் பாதிப்பு ஏற்பட்டுள்ள நிலையில், நேற்று (25) மதியம் வரை 48 பேர், கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# பற்களை பிடுங்க மந்திராலோசனை?

அவர், ஜூலை 6ஆம் திகதியன்று தேசியப் பட்டியல் எம்.பியாக பதவியேற்கவுள்ளார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பசிலை எம்.பியாக்குவதற்காக, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசியப் பட்டியல் எம்.பியான பேராசிரியர் ரஞ்சித் பண்டார, தனது எம்.பி பதவியை இராஜினாமா செய்யவுள்ளார் என அறியமுடிகின்றது.

அதன்பின்னர், ஜூலை மாதத்தில் அமைச்சரவை மறுசீரமைப்பு இடம்பெறவுள்ளதாகவும் அதில், நிதி மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக பசில் ராஜபக்ஷ நியமிக்கப்படவுள்ளார் என்றும் உள்வீட்டுத் தகவல்கள் தெரிவித்திருந்தன.

உத்தியோகபூர்வமற்ற இந்த அறிவிப்புகள் வெளியானமையால், கொழும்பு அரசியலில் ஓர் அதிர்வு தென்படுகின்றது.

அரசாங்கத்தின் பிரதான பங்காளிக் கட்சிகளைச் சேர்ந்த அமைச்சர்களான விமல் வீரவன்ச, உதய கம்மன்பில ஆகிய இருவரும், பசில் ராஜபக்ஷ பங்கேற்றிருந்த முக்கிய சந்திப்புகளை கடந்த காலங்களில் புறக்கணித்திருந்தனர்.

கட்சித் தலைவர்கள் கூட்டத்துக்கு, தலைவர் அல்லாத ஒருவர் அழைக்கப்பட்டுள்ளமையை அடுத்தே அவ்வாறான கூட்டங்களை புறக்கணித்ததாக பகிரங்கமாகவே அவ்விருவரும் தெரிவித்திருந்தனர்.

அவ்விருவரும் பகிஷ்கரித்த கட்சித் தலைவர்கள் பங்கேற்றிருந்த அவ்வாறான கூட்டங்களில் தலைமைதாங்கும் குழுவுடன் பசில் ராஜபக்ஷவும் அமர்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், விமல் வீரவன்சவின் அமைச்சின் கீழிருந்த பொஸ்பரேட் நிறுவனம், அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவின் கீழுள்ள கமத்தொழில் அமைச்சின் கீழ், எவ்விதமான முன்னறிவித்தலும் இன்றி கொண்டு செல்லப்பட்டது.

அதுதொடர்பிலும் ஏனைய பங்காளிக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் கடுமையான விமர்சனங்களை முன்வைத்திருந்தனர்.

இது இவ்வாறிருக்க, ஜூலை மாதம் நடுப்பகுதியில் இடம்பெறும் அமைச்சரவை மாற்றத்தின் போது, முழுமையான அமைச்சரவை மாற்றமொன்றும் இடம்பெறலாமென எதிர்வு கூறப்பட்டுள்ளது.

அவ்வாறு இடம்பெறுமாயின், முக்கிய அமைச்சுகளின் பொறுப்புகள், அபகரிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் தென்படுவதாகவும் அறியமுடிகின்றது.

அதில், அமைச்சர்களான விமல் வீரவன்ச மற்றும் உதய கம்மன்பில ஆகியோரின் கீழிருக்கும் அமைச்சுக்கள் அல்லது நிறுவனங்களில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படலாம் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறான மாற்றங்கள் எல்லாமே அடுத்தடுத்து முகங்கொடுக்கவேண்டிய தேர்தலைகளை அடிப்படையாக வைத்து காய்களை நகர்த்துவதற்கான ஆரம்பகட்டமென அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவற்றுடன் கொழும்பு அரசியலை அதிரச் செய்வதற்கான இன்னும் சில அதிரடியான செயற்பாடுகள் அடுத்த வாரத்துக்குள் இடம்பெறலாமெனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# 260 கைதிகளின் தண்டனையை தளர்த்த பரிந்துரை முன்வைப்பு

சிறைக் கைதிகள் புனர்வாழ்வு தொடர்பான இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த தெரிவித்தார்.

“சிறைச்சாலைகளில் தற்போது 500க்கும் மேற்பட்ட மரண தண்டனை கைதிகள் உள்ளனர்” என்றார்.

இதனிடையே, வெலிக்கடை சிறைச்சாலையில் கைதிகள் சிலரால், சிறைச்சாலையின் கட்டட கூரையின் மீதேறி முன்னெடுக்கப்படும் எதிர்ப்பு நடவடிக்கை நேற்றும் தொடர்ந்தது.

மரண தண்டனை விதிக்கப்பட்ட நாளில் இருந்து, ஆயுள் தண்டனையாக தண்டனையை இலகுபடுத்துமாறு கோரி கைதிகள் இந்த எதிர்ப்பு நடவடிக்கையினை நேற்று முன்தினம் (24) ஆரம்பித்தனர்.

இதே கோரிக்கையை முன்வைத்து பிற்பகல் மஹர மற்றும் வெலிக்கடை சிறைச்சாலைகளின் கைதிகள் சிலர் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

போதைப்பொருள் பாவனையுடன் தொடர்புபட்ட 08 கைதிகளும், எந்தவொரு தொடர்பும் அற்ற நிலையில் இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த இந்த எதிர்ப்பு நடவடிக்கை தொடர்பில் சிறைச்சாலைகள் திணைக்களத்தினால் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

# சமிக்ஞை காட்டிய குரங்கு; கடுப்பான இளம் ஆசிரியை

ஆசிரியைகள் இணைய வழியூடாகவே கல்வி நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றனர்.

இன்னும் சில பாடசாலைகளைச் சேர்ந்தவர்கள் இணையவழிப் பக்கமே செல்வதில்லை. சில பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர்கள், சமிக்ஞை கிடைக்காமையால், மரங்கள், மலைகள் மற்றும் உயரமான நீர்த்தாங்கிகளின் மீதேறி கல்வி கற்று வருகின்றமையை பலரும் பார்த்துள்ளனர். ஹப்புத்தளை, ஹல்துமுல்ல, கிரிமெட்டியைச் சேர்ந்த ஆசிரியை, 4ஆம் தர மாணவர்களுக்கு ஒவ்வொரு நாளும் 6 மணியளவிலிருந்து இணைய வழியில் கற்பிக்கின்றார். போதியளவான சமிக்ஞையை பெற்றுக்கொள்வதற்காக, 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான தன்னுடைய அலைபேசியை, மரமொன்றி கிளைகளுக்கு இடையில் வைத்துள்ளார்.

பல நாள்கள் அவ்வாறே செய்துள்ளார். இதனை அவதானித்துக்கொண்டிருந்த குரங்கொன்று மரத்துக்கு மரம் தாவி கண்ணுக்கெட்டாத தூரத்துக்கு அலைபேசியைக் கொண்டு சென்றுவிட்டது.

# பதுக்கிய உரத்தால் இராகலையில் பதற்றம்

அத்துடன், 1,300 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட வேண்டிய 50 கிலோகிராம் நிறையைக் கொண்ட ஒரு உர மூட்டையை 5,000 ரூபாய் தொடக்கம் 6,000 ரூபாய் வரை விற்பனை செய்து வந்துள்ளார்.

இராகலை - டெல்மார் பகுதியிலுள்ள விவசாயிகள், சந்தேகநபரின் வீட்டை முற்றுகையிட்டு, அங்கிருந்த ஒரு தொகை உரத்தை கைப்பற்றியுள்ளனர். சந்தேகநபரின் கடையையும் பொதுமக்கள் முற்றுகையிட்டதால், சுமார் மூன்று மணிநேரம் அங்கு அமைதியின்மை ஏற்பட்டது.

அதனையடுத்து, வர்த்தகர் கைது செய்யப்பட்டார். வர்த்தகர் பதுக்கி வைத்திருந்த ஆயிரக்கணக்கான உர மூட்டைகள், நுகர்வோர் அதிகார சபையினரால் பறிமுதல் செய்யப்பட்டு, அது 1,500 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# இராஜாங்க சி.சி.டி.வி சிக்கல் கொடுக்கிறதாம்

மணல் லொறியின் சாரதியை ஏற்றிவந்த ஓட்டோ சாரதியே கண்கண்ட சாட்சியாக உள்ளார். மெய்ப்பாதுகாவலரிடம் ஒப்புதல் வாக்குமூலமும் பெறப்பட்டுள்ளது. இராஜாங்க அமைச்சரும் ஊடகங்களுக்கு அறிக்கை விட்டிருந்தார்.

இராஜாங்க அமைச்சரின் வீட்டுக்கு அண்மையில் வீடுகள் எவையும் இல்லை. ஆகையால், அவருடைய (இராஜாங்க அமைச்சர்) வீட்டில் பொருத்தப்பட்டிருக்கும் சி.சி.டி.வி கமெராவில் பதியப்பட்டிருக்கும் காட்சிகளே முக்கிய சாட்சிகளாகவிருந்தன.

எனினும், அந்த சி.சி.டி.வி கமெராக்களுக்கான பாகங்கள் கழற்றப்பட்டுள்ளன எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இது தொடர்பிலும் சி.ஐ.டியினர் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் என அறியமுடிகின்றது.

சி.சி.டி.வி கமெராவின் காணொளிகளை சேகரிக்கும் ‘டிவிஆர்’ ஒரு மாதத்துக்கு முன்னரே பழுதடைந்துவிட்டது. அந்தப் பாகம் கழற்றப்பட்டு, திருத்துவதற்குக் கொடுக்கப்பட்டுள்ளதாக வாக்குமூலங்களிலும் தெரிவிக்கப்பட்டுள்ளன.

எனினும், ‘டிவிஆர்’ரிலுள்ள வண்தட்டை, விசாரணைகளை முன்னெடுக்கும் பிரிவினர் பெற்றுச் சென்றுள்ளனர் என அறியமுடிகின்றது. ஆதாரங்களில் சில முறைப்படி கொடுக்கப்படவும் இல்லை, அதேபோல பெற்றுக்கொண்டமைக்கு உரிய பதிவுகளும் இல்லையென உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவையெல்லாம் இவ்வாறிருக்க, கொரோனா தொற்றின் அச்சம் காரணமாக சில மெய்ப்பாதுகாவலரை மட்டுமே தனது பாதுகாப்புக்கு வைத்துக்கொண்ட இராஜாங்க அமைச்சர், ஏனையோரை, சம்பவம் இடம்பெற்ற சில நாள்களுக்கு முன்னரே அனுப்பிவைத்துவிட்டார் எனவும் விசாரணைகளின் ஊடாக அறியமுடிந்துள்ளது.

இவ்வாறான குழப்பகரமான நிலைமைகளுக்கு மத்தியிலேயே, துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பிலான விசாரணைகளை, பல கோணங்களிலும் விசாரணைப் பிரிவினர் முடுக்கிவிட்டுள்ளனர் என அறியமுடிகின்றது.

# யாழில் விடுதி முற்றுகை 2 பெண்களுடன் அறுவர் கைது

யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி உப- பொலிஸ் பரிசோதகர் மேனன் தலைமையிலான பொலிஸ் பிரிவினர், நீதிமன்றின் அனுமதி பெற்று, நேற்று (25) முன்னெடுத்த முற்றுகையின் போதே, இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

“நல்லூர் யாழ்ப்பாணம் - கோயில் வீதியில் உள்ள விடுதி ஒன்றில் கலாசார சீரழிவு நடவடிக்கைகள் இடம்பெறுவதாக முறைப்பாடுகள் கிடைத்தன. அது தொடர்பில் விடுதியைச் சோதனையிடுவதற்கான அனுமதி, யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் பெறப்பட்டது.

“விடுதியைச் சோதனையிட்ட போது, மாறுபட்ட தகவல்களை வழங்கிய இளைஞர்கள் மூவரும் இரண்டு இளம்

**குருநகர் மற்றும் மானிப்பாயைச் சேர்ந்த 21, 24 வயது இளம் பெண்களே கைது செய்யப்பட்டனர். இளைஞர்களில் ஒருவர் உரும்பிராயைச் சேர்ந்தவர். ஏனைய இருவரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள்**

பெண்களும் அங்கு இருந்தனர். விடுதி உரிமையாளரும் மாறுபட்ட தகவல்களை வழங்கினார். அதனால் அவர்கள் 6 பேரையும் கைதுசெய்துள்ளோம்.

“குருநகர் மற்றும் மானிப்பாயைச் சேர்ந்த 21, 24 வயது இளம் பெண்களே கைது செய்யப்பட்டனர். இளைஞர்களில் ஒருவர் உரும்பிராயைச் சேர்ந்தவர். ஏனைய இருவரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள்” என்று பொலிஸார் தெரிவித்தனர்.

# ‘இலங்கைத் தமிழ் அரசியலில் திருப்புமுனை’

தொடர்ந்து தெரிவித்த அவர்,

ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ், ஒவ்வொரு பொசன் மற்றும் வெசக் தினங்களிலும் கைதிகள் விடுவிக்கப்படுகின்றமை வழமையான விடயம் என்றாலும் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு குற்றவாளியாக இனங்காணப்பட்ட 16 பேரும் விடுதலை செய்யப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும் என்றார்.

இந்த விடயம் தொடர்பில் அண்மையில் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் பாராளுமன்றத்தில் நடந்துகொண்ட விதம் துயரமானதென தெரிவித்த அவர், தான் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் அங்கத்தவராக இருந்தாலும் கூட, தான் ஆளுநராக இருந்த காலத்திலும் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என்று முன்னெடுத்த முயற்சிகளை தமிழ்த் தேசியவாத அரசியல்வாதிகள் ஏற்க மறுக்கின்றனர் என்றார்.

இன்னும் 106 அரசியல்

**மீதமுள்ள அரசியல் கைதிகளுள் சிலர் நேரடியாகவே பாரிய குற்றங்களைப் புரிந்தவர்கள் என நிரூபிக்கப்பட்டு தண்டனை அனுபவித்து வருகிறார்கள். அவர்கள் தொடர்பிலும் நாம் மீளாய்வு செய்து, ஒவ்வொருவரையும் விடுதலை செய்யக்கூடிய முயற்சியில் இருக்கிறோம்**

கைதிகள் சிறையில் உள்ளதாகவும் அவர்களின் விடுதலை குறித்தும் நாம் கலந்துரையாடவுள்ளதுடன், காணாமல் போனோரைப் பற்றிய தீர்மானங்களையும் எடுக்க வேண்டும் என்றார்.

மீதமுள்ள அரசியல் கைதிகளுள் சிலர் நேரடியாகவே பாரிய குற்றங்களைப் புரிந்தவர்கள் என நிரூபிக்கப்பட்டு தண்டனை அனுபவித்து வருகிறார்கள். அவர்கள் தொடர்பிலும் நாம் மீளாய்வு செய்து, ஒவ்வொருவரையும் விடுதலை செய்யக்கூடிய முயற்சியில் இருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடனும் திட நம்பிக்கையுடனும் தெரிவிப்பதாகக் குறிப்பிட்டார்.

# கிளிநொச்சியில் தடுப்பூசி பெற்ற 48 பேருக்கு

கிளிநொச்சியில் ஆடைத் தொழிற்சாலை பணியாளர்களிற்கு நேற்று முன்தினம் (24) கொவிட் 19 தடுப்பூசி செலுத்தப்பட்டது.

அவர்களில் 25க்கும் அதிகமானோர் திடீர் உடல் நலப் பாதிப்புக்கு உள்ளான நிலையில், நேற்றுக்காலை அனுமதிக்கப்பட்டிருந்தனர். தொழிற்சாலை பஸ் மற்றும் வாகனங்களில் தொடர்ந்தும் வைத்தியசாலைக்கு மேலும் சிலர் அழைத்து வரப்பட்டதால், நேற்று மதியம் வரை 48 பேர் இவ்வாறு கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

எனினும், இவர்களின் அபாயகரமான தாக்கத்தில் எவரும் அடையாளம் காணப்படவில்லை. சாதாரண நோயாளர் விடுதிகளில் அவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கிளிநொச்சி ஆடைத்தொழிற்சாலை ஊழியர்களுக்கு இராணுவத்தினரின் ஏற்பாட்டில் கொவிட் 19 தடுப்பூசி ஏற்றும் பணிகள், இண்டாம் நாளாக நேற்றும் முன்னெடுக்கப்பட்டன.

இப்பணிகளை, கிளிநொச்சி இராணுவத் தலைமையக கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் எச்.பி ரணசிங்க நேரில் சென்று பார்வையிட்டார்.

# யாழ்., மன்னார், புத்தளத்தில் சில பகுதிகள் முடக்கம்

அத்துடன், தலைமன்னார் பியர் மேற்கு மற்றும் தலைமன்னார் பியர் கிழக்கு ஆகிய இரண்டு கிராம அலுவலகர் பிரிவுகளும் மறு அறிவித்தல் வரை தனிமைப் படுத்தப்பட்டுள்ளன. இங்கு 62 பேர் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இக்கிராமங்களுக்குச் செல்லும் பிரதான வீதிகளில் இராணுவம் மற்றும் பொலிஸார் இணைந்து வீதித் தடைகளை அமைத்துக் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, புத்தளம் நகரின் ஜே.பீ. வீதியில் பகுதியில் வசிக்கும் 21 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதையடுத்து,

**புத்தளம் நகரின் ஜே.பீ. வீதியில் பகுதியில் வசிக்கும் 21 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது அவ்வீதியின் ஒரு பகுதியும் முடக்கப்பட்டுள்ளன. சித்தி விநாயகர் ஆலயத்தின் பின் பகுதி என்பன முடக்கப்பட்டுள்ளன**

அவ்வீதியின் ஒரு பகுதியும் முடக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம், புத்தளம் 617 எப் புதுக்குடியிருப்பு கிராம சேவகர் பிரிவின் 09, 10ஆம் குறுக்குத்தெரு மற்றும் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் பின் பகுதி என்பன முடக்கப்பட்டுள்ளன.

*(எம்.றொசாந்த், நிதர்ஷன் வினோத், எஸ்.றொசேரியன் லெம்பேட், எம்.யூ.எம். சனூன்)*

# வீதியால் செல்வோரை துரத்தி துரத்தி தாக்கும் காகங்கள்

இது குறித்து மேலும் தெரியவருவதாவது ,

குறித்த வீதியை தென்மராட்சி தெற்கு பிரதேசத்திற்கு செல்லும் மக்களும் , சாவகச்சேரியில் இருந்து யாழ்ப்பாணம் - மன்னார் (ஏ -32) பிரதான வீதிக்கு செல்வோரும் பயன்படுத்தி வருகின்றனர்.

வீதியோரத்தில் காணப்படும் பனங்கூடல் மற்றும் எருக்கலை பற்றை காடுகளினுள் , கருங்குளவிகள் மற்றும் காகங்கள் என்பன கூடு கட்டியுள்ளன. அவை வீதியில் செல்வோரை துரத்தித் துரத்தித் தாக்குகின்றன. அதனால் பலர் அச்சம் காரணமாக அவ்வீதியைப் பயன்படுத்துவதைத் தவிர்த்து வருகின்றனர்.

கைக்குழந்தையுடன் , மோட்டார் சைக்கிளில் நேற்றைய தினம் பயணித்த தம்பதியினரை காகங்கள் துரத்தித் துரத்தித் தாக்கியுள்ளன. அவர்கள் தலைக்கவசம் அணிந்திருமையால் பெரியளவிலான காயங்கள் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை, குறித்த வீதியில் மாலை நேரங்களில் சிலர் நடைப்பயிற்சியில் ஈடுபட்டு வந்ததாகவும் , தற்போது கருங்குளவிகள் , காகங்களின் தாக்குதல் அச்சம் காரணமாக அவர்கள் நடைப்பயிற்சியில் ஈடுபடுவதில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# இராணுவ ட்ரக் பாய்ந்ததில் இருவர் பலி; நால்வர் காயம்

செங்கலடியை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த போதே, இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளது. இதேவேளை, நீரோடைக்குள்ளிருந்து ட்ரக் வாகனத்தை மீட்கும் நடவடிக்கையில் கனரக வாகனத்தைக் கொண்டு இராணுவத்தினர் ஈடுபட்டுவருகின்றனர். அத்துடன், மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





முடக்கம் நீங்கினாலும்

# திறக்காத கதவுகள்



ஜே.ஏ.ஜோர்ஜ்
jantongeorge@gmail.com



“நேற்று இரவு கஞ்சிதான் குடித்தோம்; இன்று மதியம் சாப்பிடுவதற்கு எதுவுமில்லை. நிவாரணப் பொருட்கள் தருவதாகக் கூறினார்கள். அதனால் தான் காலை 06 மணிமுதல் தண்ணீர் கூட குடிக்காமல் வீதியில் காத்திருக்கிறோம். ஆனால், இதுவரை யாரும் வரவில்லை” - கண்டி, குண்டசாலை, அம்பகோட்டை பகுதி மக்கள், கடந்த புதன்கிழமை (23) இவ்வாறு தமது அங்கலாய்ப்பை வெளிப்படுத்தியிருந்தனர்.

கொவிட் - 19 கடந்த வருடம் மார்ச் மாதமளவில் இலங்கை மக்களுக்குப் பரிட்சயமாகி, இன்று அந்த மக்களின் அடுத்த வேளை உணவைக்கூட கேள்விக்குறியாக்கிவிட்டு, தனது உருமாற்றப் பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

கொவிட் - 19 முதல் அலையிலேயே முடங்கிபோன நாட்டு மக்கள், மூன்றாவது அலையைத் தாங்கிங்கொள்ள முடியாமல் தவித்து நிற்கின்றனர். ஏற்றுமதி வீழ்ச்சி, பொருளாதாரப் பாதிப்பு, பங்குச்சந்தை சரிவு என உயர்மட்ட விவகாரங்களைப் பேசிக்கொண்டிருக்கும் பலரும், அடிமட்ட மக்களின் அடுப்பங்கரைக்குள் பூனை குடி வந்து பல நாள்கள் ஆகிவிட்டதை உணர்ந்தபாடில்லை.



‘நிவாரணம்’, ‘5 ஆயிரம் ரூபாய்’ என்பன எல்லாம் ஊடகங்களின் அடுக்குமொழிகளுக்கு அழகான தலைப்புகளாய் மாறியிருந்தாலும், சாதாரண மக்களை, எந்தளவு சென்றடைந்தது என்பது கேள்விக்குறியே.

முதலாம், இரண்டாம் கொவிட் அலைகளுக்கு மத்தியில் சற்றே மீண்டு வந்த மக்களுக்கு, கடந்த சித்திரைப் புத்தாண்டுக்குப் பின்னரான காலப்பகுதியில் மகிழ்ச்சி என்பது மருந்துக்குக்கூட இல்லை என்றே சொல்லாம். கொவிட் -19 மூன்றாம் அலையில் சிக்கிய மக்களை மே மாதம் முதல் அமல்படுத்தப்பட்ட ஒரு மாத பயணக் கட்டுப்பாடு முழுமையாக முடக்கியே போட்டுவிட்டது.

கடந்த 21ஆம் திகதி, பயணக் கட்டுப்பாடு நீக்கப்பட்டபோது, நகரங்களை நோக்கி மக்கள் ஓரளவுக்குப் படையெடுத்திருந்தனர். ஒவ்வொரு கடைகள், வர்த்தக நிலையங்கள் ஏன், மதுபான சாலைகளுக்கு முன்பாகவும் மக்கள் நீண்ட வரிசையில் நின்றுகொண்டிருந்தனர்.

அதனைவிடவும் தங்கக் கடன் நிலையங்களுக்கு முன்பாகவும் அடகு நிலையங்களுக்கு முன்பாகவும், மக்கள் நீண்ட வரிசையில் கால்கள் கடுக்கக் காத்திருந்தமையை அவதானிக்க முடிந்தது.

அன்றாடம் வாழ்க்கையை நடத்துவதற்குத் தேவையான உணவுப் பொருள்களை கொள்வனவு செய்து கொள்வதற்கு கூட, எவ்விதமான வருமானமும் இன்றிருந்தவர்கள், தங்களுடைய காதுகள், மூக்கு, கழுத்தில் கிடந்தவற்றை அடகு வைப்பதற்கே பெரும்பாலும் காத்திருந்தனர் என ஒவ்வொரு புகைப்படங்களும் கதை சொல்கின்றன.

கொழும்பில் மட்டுமன்றி, நாடளாவிய ரீதியிலுள்ள பெரிய, சிறிய என சகல நகரங்களிலும், தங்கக் கடன் நிலையங்களில் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர்.

இதேவேளை, கொரோனா முதல் அலையின் போது, இலங்கை மக்கள் ஆறு மாதங்களில் நகைகளை அடகு வைத்ததன் மூலம் பல பில்லியன் ரூபாய்களை கடனாகப் பெற்றுள்ளனர் என இலங்கை மத்திய வங்கி தெரிவித்திருந்தது.

இதன்படி, கடந்த வருடத்தின் இறுதி ஆறு மாதங்களில் வணிக வங்கிகள், நிதி நிறுவனங்கள், நகை அடகு நிலையங்களில் இருந்து பொதுமக்கள் 643 பில்லியன் ரூபாய்களை கடனாகப் பெற்றுள்ளனர் என இலங்கை மத்திய வங்கி சுட்டிக்காட்டியிருந்தது.



இந்த நிலையில், தங்க நகை அடகுக்கான வணிக வங்கிகளின் முற்பணம் கணிசமான அளவு அதிகரித்துள்ளது. இலங்கையில் 64% குடும்பங்கள் கொரோனா வைரஸ் பரவல் தொற்று நெருக்கடியால் நேரடியாக பாதிக்கப்பட்டுள்ளதோடு, 7% குடும்பங்கள் தங்கள் வருமானத்தை முழுமையாக இழந்துள்ளதாக, ருஹுனு பல்கலைக்கழகத்தின் மனிதநேய பீடம், சமூக அறிவியல் பீடம் ஆகியன இணைந்து மேற்கொண்ட ஆய்வில் தெரியவந்துள்ளது.

இந்நிலையில், வங்கிகள், நிதி நிறுவனங்களில் பொதுமக்களால் நகை அடகு வைக்கப்படும் செயற்பாடு வேகமாக அதிகரித்துள்ளதாகவும் மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

தற்போதைய கொரோனா அசாதாரண சூழ்நிலையில், இலகு கடன்களை அறவீடு செய்வதற்கு நாள்தோறும் வருகை தருபவர்களால் பலத்த சிரமங்களை பல குடும்பங்கள் எதிர்கொள்வதாக பலரும் அங்கலாய்க்கின்றனர்.

இக்காலத்தில் வருமானங்கள் இன்றி வீடுகளில் உள்ள குடும்பங்களிடம் சாதாரண காலத்தில் வழங்கப்பட்ட கடன்களை அறவிட நிதி நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் அடிக்கடி வருகை தரும் நிலையில், இதனால், கடன்களைச் செலுத்த முடியாத நிலையில் பல குடும்பங்கள் மன உளைச்சல்களை எதிர்கொண்டுள்ளனர்.

நுண்கடன் சுமையால் கடந்த காலங்களில் பல குடும்பங்களைச் சேர்ந்த நபர்கள் தவறான முடிவு எடுத்த சம்பவங்கள் பதிவாகி உள்ள நிலையில், நுண் கடன்களை வழங்கிய நிறுவனங்கள், மக்கள் அவற்றைத் திருப்பிச் செலுத்த கால அவகாசம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே அந்த மக்களின் வேண்டுகோளாக இருக்கின்றது.

> **“ உணவுப் பொருள்களை கொள்வனவு செய்து கொள்வதற்கு கூட, எவ்விதமான வருமானமும் இன்றிருந்தவர்கள், தங்களுடைய காதுகள், மூக்கு, கழுத்தில் கிடந்தவற்றை அடகு வைப்பதற்கே பெரும்பாலும் காத்திருந்தனர்**

கொரோனா தொற்று நிலையால் பல நிறுவனங்கள் வீழ்ச்சியடைந்துள்ளதாக தெரிவித்து ஊழியர் குறைப்பு, ஊதியக் குறைப்பு எனப் பலரும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், நிலையான தொழிலில் இருக்கும் ஊழியர்களே பல்வேறு பொருளாதாரத் துன்பங்களுக்கு மத்தியில் அல்லற்படும் நிலையில், அன்றாட கூலி வேலை செய்து வாழ்க்கையை ஓட்டிய மக்களின் நிலையை சொல்லவேண்டியதில்லை.

ஒரு மாத முடக்கம் என்பது சாதாரண மக்களுடைய மாத வருமானத்தைத் தலைகீழாகப் புரட்டிப்போட்டுள்ளது. பயணத் தடைக்குப் பின்னராக காலப்பகுதியிலும் வியாபார நடவடிக்கை மற்றும் தொழில்துறைகள் உடனடியாக வழமைக்குத் திரும்பாத நிலையில், அந்த மக்கள் சொல்லொணா துயரங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

கொரோனா முடக்கத்தால் வருமானத்தை இழந்த மக்களுக்கு, அரசாங்கம் வழங்குவதாக தெரிவித்த 5 ஆயிரம் ரூபாய் நிவாரணம் தம்மை வந்துசேரவில்லை என்று பலரும் குறை கூறுகின்றனர். சமுர்த்தி பயனாளிகளுக்கு மாத்திரமே இந்த நிவாரணம் வழங்கப்படுவதாகவும் எனினும், அனைத்து மக்களும் சமுர்த்தி பயனாளிகள் இல்லை என்பது இந்த மக்களின் தர்க்கமாக இருக்கின்றது.

பொருளாதார வீழ்ச்சி நிலைக்கு மத்தியில் அரசாங்கத்தால் நாட்டு மக்கள் அனைவரும் 5 ஆயிரம் ரூபாய் நிவாரணம் வழங்குவது என்பது சாத்தியமான விடயமாக இருக்காது. எனினும், பாதிக்கப்பட்ட மக்களை இனங்கண்டு, அவர்களுக்கு வழங்கத் தகுந்த பொறிமுறையொன்று, நாட்டில் இன்று முன்னெடுக்கப்படுகின்றதா என்றால் அது கேள்விக்குறியே!



‘உலக முடிவு’ மலையின் அடிவாரத்தில்

# துரத்தும் பூதம்

வாழ வழியும் இல்லை; உதவிக்கும் எவரும் இல்லை



க. மஹிந்த குமார்





பலாங்கொடை, நன்பெரியல் பிரம்டண் தோட்ட பிரிவானது பலாங்கொடை நகரில் இருந்து சுமார் 40 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது. அங்கு சுமார் 45 தொழிலாளர்கள் குடும்பங்களை சேர்ந்த சுமார் 500 பேர் வாழ்ந்து வருகின்றனர். ‘உலக முடிவு’ என்று அழைக்கப்படும் மலையின் அடிவாரத்தில் அமைந்துள்ள இந்தத் தோட்டத்துக்கு, தேர்தல் காலங்களில் மாத்திரமே அரசியல்வாதிகள் செல்வார்கள். மற்றைய நாள்களில் அங்கு ஒரு தோட்டம் இருக்கின்றது என்ற எண்ணம் அவர்களுக்கு இருப்பதில்லை; அந்தத் தோட்டம் தொடர்பாக எவரும் தேடியும் பார்ப்பதில்லை.

நன்பெரியல் பிரம்டண் தோட்ட மக்களின் தொழில், அத்தோட்டத்தில் கொழுந்து பறிப்பது மட்டுமேயாகும். வேறு எந்த வாழ்வாதாரத்துக்கான வளங்களும் இந்தத் தோட்டத்தில் கிடையாது. எனவே, தோட்டத்தில் வேலை இல்லாத சமயங்களில், நாட்டுப் பகுதிகளுக்குச் சென்று, கூலி வேலை செய்து பசியைப் போக்கும் நிலையில் இந்தத் தோட்ட மக்கள் வாழ்கிறார்கள். தற்போது நாடு முழுவதும் பயணத்தடை அமல்படுத்தப்பட்டு, வாழ்வாதாரத்துக்கான அனைத்து வழிகளும் முடக்கப்பட்டுள்ளதால் இந்தத் தோட்ட மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள், கொழுந்து பறிக்க முடியாமலும் நாட்டுப் பகுதிக்கு வேலைக்குச் செல்ல முடியாமல் வருமானத்தை இழந்து, பெரும் அசௌகரியங்களுக்கு மத்தியில் தற்போது வாழ்ந்து வருகின்றார்கள்.

இந்தத் தோட்ட பிரச்சினைகள் தொடர்பாக, அங்கு வாழும் மக்களிடம் கேட்டபோது, தொழில் வாய்ப்புகள், வாழ்வாதாரங்கள், அடிப்படை வசதிகள் இன்மை ஒருபுறமிருக்க, பெரும் பூதம்போன்ற பிரச்சினை ஒன்றும் தம்மைத் துரத்துவதாகத் தெரிவித்தார்கள். இது குறித்து அந்தத் தோட்ட பெண்கள் கருத்துத் தெரிவிக்கும் போது கூறியதாவது: அடிப்படை வசதிகள் இன்றி வாழ்ந்து வருகின்ற போதிலும், சட்டவிரோத மதுபான உற்பத்தி அதிகரித்து காணப்படுவதால், இரவு நேரங்களில் பெண்கள் நடமாட முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளதுடன் பாலியல் அச்சுறுத்தல்களுக்கு ஆளாக வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதுடன் இதனால் அச்சத்துடன் வாழவேண்டிய சூழ்நிலை உள்ளதாகத் தெரிவிக்கின்றனர். இது சம்பந்தமாக, பொலிஸ் நிலையத்தில் முறையிட்ட பின்னர், அதிகாரிகள் சம்பவ இடத்துக்குச் சமுகமளித்து, விசாரணைகளை மேற்கொண்டு, குற்றவாளிகளை கைது செய்து,விசாரணையின் பின்னர் பிணையில் விடுவிப்பதால், அவர்கள் மீண்டும் அதே தவறைச் செய்து வருகிறார்கள். எனவே, இரவு நேரங்களில் இந்தத் தோட்டத்துக்கு பொலிஸார் ரோந்து நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்” என்று அத்தோட்டத்தில் வாழும் பெண்கள் தெரிவித்தார்கள். இது, அத்தோட்ட மக்களின் பிரதான கோரிக்கையாகவும் இருக்கிறது.

இந்தத் தோட்ட மக்கள், நகருக்குச் செல்ல வேண்டுமாயின், தோட்டத்தில் இருந்து ஐந்து கிலோ மீற்றர் தூரம் வரை நடந்து, பதுளை - கொழும்பு பிரதான வீதிக்கு வர வேண்டும். அவ்வாறு வந்தாலும், அத்தோட்ட மக்கள் நகருக்குச் செல்வதற்கான பஸ்கள் கிடைப்பதில்லை.

மேலும், தேர்தல் காலங்களில் அரசியல் வாதிகளும் தொழிற்சங்க காரர்களும் வாக்குகளை பெறுவதற்காக இங்கு வந்து சென்று போவதாகவும் அதன் பின்னர் அவர்களைக் காணமுடிவதில்லை.

அத்துடன், சில தொழிற்சங்கங்களுக்கு மாதாந்தம் சந்தா பணங்களை செலுத்துவதில் தவறுவதில்லை எனவும் ஆனால், தமது துன்பங்கள் குறித்து அவர்கள் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுப்பதற்கு முன்வருவதில்லை எனவும் தொழிலாளர்கள் விசனம் தெரிவிக்கிறார்கள்.

தோட்டத்தில் வேலை செய்து ஓய்வு பெற்ற தோட்டத் தொழிலாளர்கள் பலர் பிள்ளைகளால் கைவிடப்பட்ட நிலையில், எவ்வித வருமானமும் இன்றி ஆதரவற்ற நிலையில் பலர் இருக்கும் போது, அவர்களில் சிலருக்கு அரசாங்கத்தால் வழங்கப்படும் சமுர்த்தி, ஓய்வூதியம் ஆகிய கொடுப்பனவுகள் கிடைக்கின்ற போதிலும் பலருக்கு அவ்வாறான கொடுப்பனவுகள் கிடைக்கவில்லை.

அத்துடன், அத்தோட்டத்தில் உள்ள சுமார் 25 மேற்பட்ட மாணவர்கள், பாடசாலை செல்ல வேண்டுமாயின் 40 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள பலாங்கொடை நகரில் உள்ள பாடசாலைகளுக்கு வர வேண்டும். இதன் காரணமாக அத்தோட்ட மாணவர்கள் அங்கிருந்து சுமார் 10 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள ஹல்தமுல்ல நகரில் உள்ள பாடசாலைகளுக்கு செல்கின்றார்கள். அப்படியும் முடியாத சில மாணவர்கள் மிக அருகில் உள்ள சிங்கள மொழி மூல பாடசாலைகளுக்கு சென்று வருகின்றதனால் பல சமூக பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர்.

அத்தோட்டத்தில், பாடசாலை செல்லும் வயதில் உள்ள பல மாணவர்கள் பாடசாலை செல்வதற்கான வசதியின்மையால் அத்தோட்ட நிர்வாகத்தில் பேர் பதிந்து வேலை செய்ய வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.



# ‘தோர்’ மீண்டது ‘ஷீனா’ சிக்கியது



மகேஸ்வரி விஜயனந்தன்
mayurisaai@gmail.com

கொரோனா பயம் உலகை ஆட்கொண்டு, சரியாக ஒன்றரை வருடங்கள் கடந்து, இந்தத் தொற்று இயற்கையாக உருவாகியதா அல்லது உருவாக்கப்பட்டதா என்ற கேள்விக்கு பதில் கிடைக்காத நிலையில், கொரோனாவானது, நாளுக்கு நாளுக்கு திரிபடைந்து ‘எல்பா’, ‘டெல்டா’, ‘டெல்டா பிளஸ்’ எனப் பல்வேறு உருமாற்றங்களுடன், உலகை அச்சுறுத்துவது மட்டுமல்ல. இதுவிலங்குகளால் பரவுமா, காற்றில்பரவுமா? என்று எண்ணி எண்ணியே, உயிர்பயத்துடன் நாள்களைக்கடத்தும் துர்ப்பாக்கியத்துக்கு முழுஉலகமே ஆளாகியுள்ளது.

இந்த ஆட்கொல்லி தொற்றுக்கு, விலங்குகளும் விதிவிலக்கல்ல என்பதை அண்மைக்கால சம்பவங்கள் உறுதிபடுத்தி வருவதால், ‘ஐயோ! நமது செல்லப் பிராணிகளுக்கும் இத்தொற்று ஏற்பட்டுவிடுமா’ என்ற அச்சம், செல்லப்பிராணி பிரியர்களையும் ஆட்கொண்டுவிட்டது.

இந்த நிலையில்தான், தெஹிவளை மிருகக்காட்சிசாலையிலுள்ள நீர்யானையும் வரிக்குதிரையும் உயிரிழந்துள்ளதுடன்,‘தோர்’ என்ற ஆண் சிங்கத்துக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இது இலங்கையர்களுக்கு அதிர்ச்சியூட்டும் செய்தியாக அமைந்தது.

ஒருநாளைக்கு 20 மணி நேரம் தூங்கும் குணமுடைய சிங்கத்தை, சோம்பேறி மிருகம் என அழைத்தாலும், சூரியன் மறையும் நேரத்தில் தூக்கத்தைவிட்டு வேட்டைக்குச் செல்வதில் சிங்கத்துக்கு நிகர் சிங்கம் தான். அதிலும் ஆண்சிங்கத்தை வி,டவேட்டையாடுவதில் பெண் சிங்கங்களே வல்லமை கொண்டன.

இப்படிப் பல சிறப்புகளைக் கொண்ட விலங்குகளுக்கே இராஜாவான சிங்கத்தையும் கொரோனா விட்டு வைக்கவில்லை. அதுவும் மாதக்கணக்கில் மிருகக்காட்சி சாலைகள் மூடப்பட்டுள்ள இச்சமயத்தில், சிங்கத்துக்கு தொற்று ஏற்பட்டுள்ளமை வியப்புக்குரிய விடயம்தான். இலங்கையில் மட்டுமல்ல, இந்தியாவின் மிகப்பெரிய மிருகக்காட்சிசாலையான வண்டலூரில் இதுவரை மூன்று சிங்கங்கள் தொற்றுக்குப் பலியாகியுள்ளன.

ஆனால், தெஹிவளை மிருகக்காட்சிசாலையில் தொற்றுக்குக்குள்ளான ‘தோர்’ பூரணகுணமடைந்துள்ளதாக சம்பந்தப்பட்டவர்கள் உறுதிப்படுத்தியுள்ள நிலையில், இப்போது அதே மிருகக்காட்சிசாலையில் தோருடன் ஒரே குகையிலிருக்கும் ‘ஷீனா’ என்ற பெண் சிங்கத்துக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

2013ஆம ஆண்டு தென்கொரியாவின் சோல் மிருகக்காட்சிசாலையிலிருந்து கொண்டுவரப்பட்ட, 11 வயதே நிரம்பிய ‘தோர்’ என்ற சிங்கத்துக்கு எவ்வாறு தொற்று ஏற்பட்டது என்பது மர்மமாகவே உள்ளநிலையில், எவ்வாறு தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற பரிசோதனைகளும் விசாரணைகளும் ஒருபுறம் நடக்கும்போது, மிருகக்காட்சிசாலையில் சிங்கங்களைப் பராமரிக்கும் பொறுப்பில் இருப்பவர்கள் அல்லது சிங்கங்களுக்கு கொண்டு வரப்படும் உணவு மூலம், கொரோனா தொற்றுப் பரவியிருக்கலாம் என்ற சந்தேகமும் மறுபுறம் எழுந்துள்ளது.

வழமையாக, அதிகமாக உண்ணும் குணமுடைய ‘தோர்’ இந்தமாதம் 15ஆம் திகதியிலிருந்து உணவு உண்பதைத் தவிர்த்து வந்துள்ளதுடன், மூச்சுவிடுவதிலும் சிரமத்தை எதிர்கொண்டதை அடுத்து, 18ஆம் திகதி அன்டிஜன் பரிசோதனை மூலம் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

தொற்று உறுதி செய்யப்பட்ட உடனேயே அதைத் தனிமைப்படுத்தி, அதற்கான





சிகிச்சைக்குத் தேவையான மருந்துகள் உடனடியாக, இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்டதை அடுத்து, ‘தோர்’ தொற்றிலிருந்து மீண்டு வந்துள்ளதுடன், தொடர்ந்தும் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், தோருடன் ஒரே குகையில் மேலும் மூன்று சிங்கங்கள் தங்கியுள்ளதுடன், இதில் ‘ஷீனா’ என்ற பெண் சிங்கத்துக்கு நேற்றுமுன்தினம் (24) தொற்று உறுதிசெய்யப்பட்டு உள்ளது. பேராதனை கால் நடைபீடம் மற்றும் ராகம வைத்திய பீடங்களில் முன்னெடுக்கப்பட்ட பரிசோதனைகளில் இந்தவிடயம் தெரியவந்துள்ளதுடன் இதற்கான சிகிச்சைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எனவே, ‘தோர்’, ‘ஷீனா’வுடன் இத்தொற்று நின்றுவிடுமா அல்லது அதே குகையிலிருக்கும் மற்றைய இரண்டு சிங்கங்கள் உள்ளிட்ட அனைத்து விலங்களுக்கும் தொற்றிவிடுமா என்ற அச்சம் நிலவினாலும் முறையான முகாமைத்துவம், கட்டுப்பாடுகள் மூலம், இது ஏனைய விலங்குகளுக்குப் பரவுவதைக் கட்டுப்படுத்தலாம் என இலங்கை கால் நடை மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டி உள்ளது.

ஆனால், குறித்த மிருகக்காட்சிசாலையில் கொரோனா கட்டுபடுத்தல் செயற்பாடுகளில் கால்நடை மருத்துவர்களின் பரிந்துரைகளுக்கு செவிசாய்க்கவில்லை என, அரசாங்க கால்நடை மருத்துவ அதிகாரிகள் சங்கம் குற்றஞ்சுமத்தியுள்ளது. எனவே, அங்குள்ள மிருகங்கள் கொரோனா தொற்றுக்கு உள்ளாகும் ஆபத்து உள்ளதென்றும் அச்சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே, இத்தொற்று அங்குள்ள ஏனைய மிருகங்களுக்கும் தொற்றுமாயின் பெறுமதிமிக்க மிருகங்களை இழக்கவேண்டிய நிலை ஏற்படும். எனவே கால்நடை வைத்தியர்களின் பரிந்துரைகளைச் செயற்படுத்துமாறு அச்சங்கம் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சருக்கு கடிதம் எழுதியுள்ளது.

> **“ வெறுமனே காட்சிகாண் கூடமாக மட்டுமல்லாது, அதிகம் பெறுமதியுடைய மிருகங்களின் இடமென்பதால் பாதுகாப்பது அவசியம்**

இந்த நிலையில், இலங்கையர்களுக்கான கொரோனா தடுப்பூசி உள்ளிட்ட ஏனைய மருத்துவ விடயங்களுக்கும் ஏனைய நாடுகளை எதிர்பார்க்கும் இலங்கை, தொற்றுக்குள்ளான ஒரு சிங்கத்தை ஆரம்பத்திலேயே கண்டறிந்து, இந்திய மருந்தின் உதவியுடன் காப்பாற்றியுள்ள நிலையில், அத்தனை மருத்துவ வசதிகள் உள்ளிட்ட ஏனைய வசதிகளையும் கொண்ட இந்தியாவில் கொரோனாவுக்கு இரண்டு சிங்கங்கள் பலியாகியுள்ளமை கவலைக்குரிய விடயமே.

செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூரில் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் சுமார் 1,500 விலங்குகள் பராமரிக்கப்பட்டு வரும் நிலையில், ஆண்டுதோறும் 25 இலட்சம் பேர் வரையில் இவற்றைப் பார்வையிட வருகின்றனர்.

மே மாதம் 26ஆம் திகதி, சில சிங்கங்களுக்கு இருமல் இருந்துள்ள நிலையில், இந்த மாதம் நான்காம் திகதி முன்னெக்கப்பட்ட பரிசோதனையில் ஒன்பது சிங்கங்களுக்கு தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில், ‘நீலா’ என்ற பெண்சிங்கம் உயிரிழந்து விட்டதுடன், 16ஆம் திகதி மற்றுமொரு ஆண் சிங்கமும் உயிரிழந்து, மேலும் பல சிங்கங்களுக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

எனவே, மிருகக்காட்சிசாலை என்பது, வெறுமனே காட்சிகாண் கூடமாக மட்டுமல்லாது, மிகவும் பலமானதும் அதிகம் பெறுமதியுடையதும், விசித்திரமானதுமான மிருகங்கள் இருக்கும் இடமென்பதால், அதைப் பாதுகாப்பது சம்பந்தப்பட்டவர்களின் தலையாய கடமையாகும்.

இதனை உணர்ந்து செயற்பட்டால், ‘தோர்’, ‘ஷீனா’ மாத்திரமல்ல, எந்த நோய் தொற்றியது என்று அறியாமலே அண்மையில் உயிரிழந்த நீர்யானை, வரிக்குதிரை போன்ற ஏனைய தனித்துவமான மிருகங்கள், உயிரினங்களின் உயிரிழப்புகளையும் தவிர்க்கலாம்.





# திருடனாய்ப் பார்த்து திருந்தாவிடின்..



ப.பிறின்சியா டிக்சி
p.p.dixci@gmail.com


ஒவ்வொருநாளும் நடைப் பயிற்சியில் ஈடுபடும் வயதான ஒருவர், ஒருநாள் வெளியில் செல்ல முடியாமல் போய்விட்டால், குட்டிபோட்ட பூனையைப் போல, வீட்டுக்குள் அங்குமிங்கும் உலாவித்திரிவார்; எவ்விதமான ஆறுதலுக்கும் செவிசாய்க்கமாட்டார். அவ்வாறானவர்களைக் கட்டுப்படுத்துவது என்பது நினைத்துக்கூட பார்க்கமுடியாது.

ஆனால், கட்டுப்படுத்த வேண்டியது ஒரு கடப்பாடாகும். அவ்வாறுதான், நமது நாட்டில் பயணக் கட்டுப்பாடுகள் 30 நாள்களாக அமலில் இருந்தன. வீட்டிலிருந்து வெளியேறாது, தொலைக்காட்சிகளையும் சமூக வலைத்தளங்ளையும் பார்ப்போருக்கு, கட்டுப்பாடா, அப்படினா? எனக் கேட்குமளவுக்கு இருந்தன.

வல்லரசு நாடுகளின் தலைவர்கள் முதல் சீனா என்றதொரு நாடு இருப்பதாக அறிந்திராத கிராமங்களில் வசிக்கும் பாமர மக்கள் வரை, கொரோனாவின் பிடிக்குள் சிக்கியுள்ளனர்.

சீனா, மெல்லத் தனது ஆதிக்கத்துக்குள் கொண்டுவர முயலும் இலங்கைக்குள்ளும் கொரோனா வைரஸ் ஊடுருவியமை அவ்வளவு புதினமானதாக இருக்கவில்லை.

சீனாவிலிருந்து இலங்கைக்கு வந்த சீனப் பெண்ணொருவர், கடந்த 2020ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27ஆம் திகதி இலங்கைக்குள் முதல் கொரோனா தொற்றாளராக அடையாளம் காணப்பட்டிருந்தார். இதனையடுத்து, 2020 மார்ச் மாதம் 11ஆம் திகதி கொரோனா தொற்றுக்குள்ளான முதலாவது இலங்கையர், நாட்டில் அடையாளம் காணப்பட்டிருந்தார்.



அன்றைய தினம் முதல் படிப்படியாக நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து, இன்று மூன்றாவது கொரோனா அலைக்குள் நாடு தத்தளிக்கிறது.

இதைக் கட்டுப்படுத்தும் பொருட்டே நாடளாவிய ரீதியில் 30 நாள்கள் பயணக் கட்டுப்பாடுகள் அமல்படுத்தப்பட்டிருந்தன. அதாவது, மே மாதம் 21ஆம் திகதி அமல்படுத்தப்பட்டிருந்த பயணக் கட்டுப்பாடுகள், ஜூன் 21ஆம் திகதியே நீக்கப்பட்டன. அத்தியாவசியத் தேவைகளுக்காக தொடர்ந்து மூன்று நாள்கள் இந்தத் தளர்வு இருந்தது. பின்னர், பொசன் பௌர்ணமி தினத்தையொட்டி மீண்டும் 30 மணித்தியாலங்களுக்கு பயணக் கட்டுப்பாடுகள் அமல்படுத்தப்பட்டு, நேற்று (25) காலை தளர்த்தப்பட்டன.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காகவே பயணக் கட்டுப்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுவதாக, இராணுவத் தளபதியும் கொரோனா ஒழிப்புக்கான செயலணியின் தலைவருமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவிக்கின்றார்.



எனினும், இந்தப் பயணக் கட்டுப்பாடுகள் உரிய முறையில், சரியாக முன்னெடுக்கப்படுகின்றனவா என்பதே தற்போது எழும் கேள்வியாகும்.

பல்வேறு அரசியல் தேவைகளுக்காகவும் ஒரு சில மழுப்பல்களுக்காகவுமே பயணக் கட்டுப்பாடுகள் பயன்படுத்தப்படுவதாக, எதிர்க்கட்சியினர் தொடர்ச்சியாகக் கூச்சலிடுகின்றர். அத்துடன், ஒருசாராருக்கு மாத்திரம் இறுக்கமாகப் பயன்படுத்தப்படும் பயணக் கட்டுப்பாடு, மறுசாராருக்கு தாராளமாக்கப்படுவதாகவும் குற்றஞ்சாட்டப்படுகின்றது.

இதற்கு எடுத்துக்காட்டாகவே பயணக் கட்டுப்பாடு அமலில் இருந்த போது எடுக்கப்பட்ட இருவேறு புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் கடந்த வாரம் வைரலாகியிருந்தன. ஒன்று, கடந்த 18ஆம் திகதியன்று கொழும்பு மாநகரில் ஏற்பட்ட வாகன நெரிசல் புகைப்படம். மற்றொன்று, கடந்த 20ஆம் திகதியன்று மட்டக்களப்பு - ஏறாவூர் பகுதியில் அத்தியாவசியத் தேவைகளுக்காக வீட்டிலிருந்து வெளியேறிய பொதுமக்கள் சிலரை, இராணுவத்தினர் வீதியில் முழந்தாளிட வைத்த புகைப்படம்.

ஆட்சியில் இருப்போர், என்னதான் ‘ஒரே நாடு- ஒரே சட்டம்’ எனக் கூறி வந்தாலும் இவ்விரு புகைப்படங்களுமே ஒரே நாட்டுக்குள் இருவேறு சட்டங்கள் என்பதை அப்பட்டமாக படம் பிடித்துக் காட்டியுள்ளன.

இது தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. பயணக்கட்டுப்பாட்டிலேயே இவ்வாறான அட்டூழியங்கள் அரகேற்றப்பட்டிருந்தால், யுத்த காலத்தில் எவ்வாறான மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றிருக்கும் என இராணுவத்துக்கு எதிராகப் பலர் முழங்கினர்.

“ஏறாவூரில் தமது அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்றுவற்காக வீதிக்கு வந்த பொதுமக்கள் சிலரை, வீதியில் முழங்காலில் நிற்க வைத்த சம்பவம், நாடு சர்வாதிகாரத்தை நோக்கிப் போவதை எடுத்துக்காட்டுகின்றது” என திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

“பயணக் கட்டுப்பாடுகள் அமலில் இருப்பதாகக் கூறப்பட்டாலும் நாடு முழுவதும் நாளாந்தம் பல்லாயிரக்கணக்கான வாகனங்கள் வீதிகளில் உலாவுகின்றன. அதேபோல, பல்லாயிரக்கணக்கான பொதுமக்களும் வீதிகளில் பயணிப்பதை நாம் காண்கிறோம். இந்நிலையில், ஏறாவூர் மக்களை மட்டும் வதைக்கின்ற இச்செயல் நாட்டில் நியாயமான சட்ட ஆட்சி இல்லை என்பதை உறுதிப்படுத்துகின்றது” எனவும் அவர் தெரிவித்தார்.

தவிர, இவ்வாறான அதிகாரத்தை இராணுவத்துக்கு வழங்கியது யார் எனவும் இம்ரான் எம்.பி கேள்வியெழுப்பினார். இவ்வாறு எதிர்ப்புகள் வலுவடைந்திருந்தன.

இந்நிலையிலேயே, இந்தச் சம்பவம் தொடர்பில் இராணுவ பொலிஸ் ஊடாக, முறையான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் விசாரணைகள் நிறைவடைந்தன் பின்னர், அந்த இராணுவ வீரர்களுக்கு எதிரான கடுமையான ஒழுங்காற்று நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும் என்றும் இராணுவம் தற்போது அறிவித்துள்ளது.

பயணக் கட்டுப்பாடு எனும் சட்டம் என்ன நோக்கத்துக்காகக் கொண்டுவரப்பட்டதோ அதை அடைவதற்காக, முறையாக நடைமுறைப்படுத்தப்பட்டிருப்பின் இந்தப் பிரச்சினை ஏற்பட்டிருக்காது.

கொரோனா வைரஸை நாட்டிலிருந்து விரட்டுவது தனியொரு நபரால் மாத்திரம் முடியாத காரியம். இதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். இதில் அரசாங்கம், கொரோனா ஒழிப்புச் செயலணி, சுகாதாரப் பிரிவு, இராணுவம், பொலிஸ், நாட்டின் பிரஜைகள் என அனைவருக்கும் ஒவ்வொரு கடமைகள் இருக்கின்றன. அவற்றின் பொறுப்பு என்னவென்பதை உணர்ந்து கடமையாற்றினால் மாத்திரமே கொரோனாவைக் கட்டுப்படுத்தக் கூடியதாக இருக்கும்.

ஆனால், அரசாங்கம் அதை விடுத்து, மக்களை வீடுகளுக்குள் முடக்கிவிட்டு, எரிபொருள் விலையேற்றத்தை மேற்கொண்டும் கொலைக் குற்றவாளி என நீதிமன்றால் தீர்ப்பிடப்பட்ட துமிந்த சில்வா போன்றோரை விடுவித்தும் வருகின்றது.



அத்தோடு, மேற்குறிப்பிட்ட இராணுவத்தின் அடாவடி நடவடிக்கை மாத்திரமல்ல; பொதுமக்கள் சிலரின் நடவடிக்கைகளும் கொரோனா ஒழிப்புக்கு முட்டுக்கட்டையாக இருப்பதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். ஒரு சிலர் இந்தப் பயணக் கட்டுப்பாட்டு காலத்தைப் பயன்படுத்தி சட்டவிரோத மதுபானம் தயாரித்தல், கஞ்சா, ஹெரோய்ன் உள்ளிட்ட போதைப்பொருட்கள், உரம் கடத்துவதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பொலிஸாரைக் கண்டால் மாத்திரம் முகக் கவசம் அணிகின்றனர் எனவும் தெரிவிக்கின்றனர். அவ்வாறே, பீடி பிடித்துக்கொண்டு சைக்கிளில் சென்ற முதியவர் ஒருவர், தூரத்தில் பொலிஸைக் கண்டதும் அவசர அவசரமாக முகக் கவசத்தை அணிந்துள்ளார். இதன்போது, அவரது தாடி, மீசை தீப்பிடித்துடன், பொலிஸார், அவரை எச்சரித்து அனுப்பிய சம்பவமும் நடந்தேறியது.

பயணக் கட்டுப்பாடு, தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய குற்றச்சாட்டில் கடந்தாண்டு ஒக்டோபர் மாதம் 30ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் (24) வரையான காலப்பகுதியில் 42,789 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இந்தக் கைதுகள் அனைத்தும், பொதுமக்களும் அவர்களது பொறுப்புகளை உணர்ந்து நடக்கவிலை என்பதையே கட்டுகின்றன. இதனைத்தான் ‘திருடனாய் பார்த்துத் திருந்தாவிட்டால், திருட்டை ஒழிக்க முடியாது’ என்று 58 ஆண்டுகளுக்கு முன்னரே எம்.ஜி.ஆர் பாடல் வரிகள் மூலம் உலக்கு உணர்த்தியுள்ளார்.

எனவே, இந்தப் பயணக் கட்டுப்பாட்டுக் காலத்தில் தமது கடப்பாடு (கடமை) என்ன என்பதை ஆட்சியில் இருப்பவர்கள் முதல், நாட்டின் பிரஜைகள் வரை அனைவரும் உணர்ந்து நடந்தால் மாத்திரமே, ‘கொரோனாவைக் கட்டுப்படுத்தல்’ எனும் இலக்கை சரியாக அடைய முடியும்.

ILO C190 சமவாயம்:

# பணியிட துன்புறுத்தல்கள்

## முற்றுப்புள்ளிக்கு வழிகோலும் அணுகுமுறைகள்



ஆர்த்தி பாக்கியநாதன்

உலக தொழிலாளர் ஸ்தாபனத்தால், 'வேலை உலகில்' (world of work) இடம்பெறும் வன்முறைகளையும் துன்புறத்தல்களையும் இல்லாதொழித்து, அனைவருக்கும் பாதுகாப்பான வேலைத்தளங்களை உருவாக்கும் நோக்கில் C190 சமவாயம் பரிந்துரைக்கப்பட்டு, நேற்றுடன் (25) இரண்டு வருடங்கள் பூர்த்தியாகின்றன.

பெண் தொழிற்சங்கத் தலைவர்கள், பெண்ணிய செயற்பாட்டாளர்கள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் ஆகியோரால், சுமார் ஒரு தசாப்த காலமாக மேற்கொண்ட தொடர் போராட்டங்களின் பெறுபேறாக, வேலையுலகில் இடம்பெறும் பால்நிலைசார் வன்முறைகள், துன்புறுத்தல்களைத் தடுக்கவும் வெளிக்கொண்டு வருவதற்குமாக, சர்வதேச தொழிலாளர் தாபனம் C190 சமவாயத்தைப் பரிந்துரைத்தது.

சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தால், 2019ஆம் ஆண்டு ஜூன் மாதம் 21ஆம் திகதி, ஜெனீவாவில் நடைபெற்ற தொழிலாளர் சம்மேளனத்தின் 108 ஆவது மாநாட்டின்போது, பணியிடங்களில் இடம்பெறும் வன்முறைகள், துன்புறுத்தல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்கில், C190 சமவாயம் முன்வைக்கப்பட்டது. மேற்குறித்த திகதியில் C190 சமவாயம் முன்வைக்கப்பட்டாலும், ஜூன் மாதம் 25ஆம் திகதியே முழு வீச்சுடன் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது.

பணிக்குச் செல்லும் போது, பணியிடங்கள், பணி முடிய வீடு திரும்பும்போது இடம்பெறும் துன்புறுத்தல்கள், வன்முறைகளை போன்றவற்றை இல்லாதொழித்து, பாதுகாப்பான வேலையுலகை உருவாக்க வேண்டும் என்பதே, இச்சமயவாயத்தின் நோக்கமாகும்.

துன்புறுத்தல்கள், வன்முறைகள் என்கிறபோது, ஏற்றுக்கொள்ள முடியாத நடத்தைகள், நடைமுறைகள், அச்சுறுத்தல்கள், பாதிப்பை ஏற்படுத்தும் ஏதாவதொரு செயல், நிகழ்வு மீண்டும் மீண்டும் இடம்பெறல், உடல், உளவியல், பாலியல், பொருளாதார ரீதியிலான தீங்கு, பாலின அடிப்படையிலான வன்முறை, துன்புறுத்தல் ஆகியவற்றைக் கொள்ளலாம்.

'பாலின அடிப்படையிலான வன்முறை, துன்புறுத்தல்' என்பன, நபர்களை நோக்கியதாக வரையறுக்கப்படுகின்றன. அதாவது, பால்நிலையைக் காரணம் காட்டித் துன்புறுத்துதல், ஒரு குறிப்பிட்ட பாலினத்தை நோக்கிய துன்புறுத்தல்கள் வன்முறைகள் என்பனவாகும்.

இந்தப் பிரகடனத்தின் மூலமாக, அங்கத்துவ நாடுகள் வன்முறையை ஒழிப்பதற்கு ஒழுங்கு விதிகளை அமைத்துக் கொள்வதற்காக சேவை வழங்குநர்களும், ஊழியர்களும் அவர்களின் பிரதிநிதிகளும் பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலம், பணியிடத்தில் கொள்கை ஒன்றை உருவாக்குவதற்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

குறை வருமானம் பெறும், மாற்றுப்பாலின தொழிலாளர்கள் ஆகியோருடைய அனுபவங்களைப் பிரதிபலிப்பதாக இப்பிரகடனம் அமைந்துள்ளது. மிக வலுமிக்க தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு, பெண்ணியவாதிகள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் என அனைவரும் மேற்கொண்ட பிரசார நடவடிக்கைகளினூடாகப் பாகுபாடு, ஒரங்கட்டல், அடக்குமுறை என்பன, எவ்வாறு வேலையுலகில் வன்முறைகள், துன்புறுத்தல்கள் என்பவற்றுக்கு மூல காரணமாக அமைகிறது என்ற விடயங்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

எந்தவித ஒப்பந்தமும் இல்லாம் பணியாற்றும் வீட்டுப் பணிப்பெண்கள் உட்பட, ஏனைய முறைசாராத் தொழிலாளர்களும் C190 சமவாயத்தில் உள்ளடக்கப்பட்டு உள்ளமையால், இச்சமவாயம் அனைத்து உழைக்கும் வர்க்கத்துக்கும் பாதுகாப்பை வழங்கக்கூடிய ஒரு முக்கிய சமவாயமாகக் கருதப்படுகிறது.

உருகுவே (ஜூன் 2020) பீஜீ (ஜூன் 2020), நாம்பியா (டிசெம்பர் 2020), ஆர்ஜென்டினா (பெப்ரவரி 2021), சோமாலியா (மார்ச் 2021), ஈக்குவடோர் (மே 2021) ஆகிய நாடுகள் இதுவரை C190 சமவாயத்தை நிறைவேற்றி உள்ளன. சிலி, இத்தாலி ஆகிய நாடுகள், தேசிய நிறைவேற்றல் நடவடிக்கைளைப் பூர்த்தி செய்துள்ளன. எனினும், அந்நாடுகள் இரண்டும் இதுவரை உத்தியோகபூர்வ ஆவணங்களை, உலக தொழிலாளர் ஸ்தாபனத்துக்கு அனுப்பவில்லை.

> பாதுகாப்பான வேலைத் தளங்களை உருவாக்கும் நோக்கில் C190 சமவாயம் பரிந்துரைப்பு

தொழிற்சங்கங்களின் பங்களிப்புடன் சர்வதேச தொண்டு நிறுவனமான 'சொலிடாரிட்டி சென்ரர்' முன்னெடுத்துள்ள முயற்சிகளின் பயனாக, இலங்கையில் C 190 சமவாயத்தை நிறைவேற்றுவதற்குப் பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதன் பயனாக, கடந்த மார்ச் மாதம் குறித்த சமவாயத்தை இலங்கையில் நிறைவேற்றுவதற்கான அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா பாராளுமன்றத்தில் இவ்விடயம் தொடர்பான உரையை நிகழ்த்தியுள்ளார். எதிர்க்கட்சி எம்.பியான ரோஹினி கவிரத்னவும் C190 சமவாயம் இலங்கையில் நிறைவேற்றுவதன் முக்கியத்துவம் குறித்து பாராளுமன்றில் உரையாற்றியுள்ளார்.

இலங்கையில் C190 பரிந்துரையை, புதிய சட்டமாக நடைமுறைப்படுத்துவதாயின் பல ஆண்டுகள் செல்லக்கூடும் என்ற நிலையில், நாட்டில் ஏற்கெனவே உள்ள தொழிலாளர் சட்டத்துக்குள் இதை உள்வாங்க முடியுமா என்பது தொடர்பிலும் தொழிற்சங்கங்கள் கவனம் செலுத்தி வருகின்றன.

இலங்கை, C190 பிரகடனத்தை, இலங்கையில் பணியிடங்களில் இடம்பெறும் வன்முறைகள் துன்புறத்தல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க அனைவரும் ஒன்றிணைவோம்!

# பயங்கரவாத எதிர்ப்பு அடிப்படைவாதமா?

## 'முஸ்லிம்களுக்கு எதிராக, அரசாங்கத்தின் இனவாதப் போக்கின் அடிப்படையிலான கைது" –சட்டத்தரணி சஞ்சய வில்சன் ஜயசேகர



பா. நிரோஸ்



சஞ்சய வில்சன் ஜயசேகர – சட்டத்தரணி



ஏ.ஜி.எம்.ஜஸீம் – அஹ்னப்பின் அப்பா



அஹ்னப் ஜஸீம்

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் (ப.த.ச) கீழ் 2020ஆம் ஆண்டு மே 16ஆம் திகதி இலங்கையில் கவிஞர் ஒருவர் கைது செய்யப்பட்ட சம்பவம் சர்வதேச அளவில் இலங்கைக்கு அவப்பெயரை ஏற்படுத்தியுள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பிரயோகித்து, பல அப்பாவி இளைஞர்களின் வாழ்நாள் நாசமாக்கப்படுவதாக, இவ்வாரப் பாராளுமன்ற அமர்வில் பலரும் கருத்துத் தெரிவித்திருந்தார்கள்.

ப.த.ச நீக்கப்பட வேண்டுமென, சிறுபான்மை மக்களின் பிரதிநிதிகளும் சர்வதேசமும் தொடர்ந்து பல தசாப்தங்களாக அழுத்தங்களை வழங்கி வருகிறபோதிலும், இச்சட்டத்துக்குள் பல அப்பாவி இளைஞர்கள் சிக்குண்டு, தங்களது வாழ்நாளைத் தொலைக்கும் பேரவலம் இலங்கையில் தொடர்கின்றது.

மன்னாரிலிருந்து யுத்தம் காரணமாக, புத்தளம், நுரைச்சோலை, பொய்யாவாடியில் 1990ஆம் ஆண்டு குடியேற்றிய அஹ்னப்பின் அப்பா ஏ.ஜி. எம்.ஜஸீம், 2009ஆம் ஆண்டு, மன்னாருக்கு மீண்டும் வந்து மீள்குடியேற்றியுள்ளார்.

மகனின் கைதால் என்ன செய்வதென்றே புரியாத நிலையில் இருக்கும் ஏ.ஜி.எம். ஜஸீம், தமிழ்மிரருக்கு தனது நிலைமைகளை இவ்வாறு விளக்கினார்.

"400 நாள்களுக்கு மேலாக எனது மகனைத் தடுத்து வைத்திருக்கிறார்கள். இதுவோர் அநாகரிகமான செயலாகும். எனது மகனை, தங்காலை தடுப்பு முகாமிலிருந்து அழைத்துவந்து, யாருக்கும் அறிவிக்காமல் நீதிமன்றில் ஆஜர்படுத்தி இருந்தார்கள். வாக்குமூலம் வழங்க வேண்டுமென, என்னை சி.ஐ.டிக்கு அழைத்திருந்தார்கள். அப்போது, அங்கிருந்த அதிகாரிகள், 'உங்கள் மகன் பயங்கரவாதத்தைக் கற்றுக்கொண்டார். அதனை மாணவர்களுக்குக் கற்றுக்கொடுத்தார். இந்தக் குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்ளச் சொல்லுங்கள். அவரை, அரச சாட்சியாளராக மாற்றி, விடுதலை செய்கிறோம்' என்றனர். இதன்போது, மகனோடு பேசுவதற்கு அனுமதித்தார்கள். 'என்ன மகன் நடக்குது' என்று கேட்டேன். 'எனக்குள்ள இருந்து, பயங்கரவாதம் உருவாக்கப்பட்டதாவும், அத நான் மாணவர்களுக்கு படித்துக்கொடுத்தேனென்டும் ஒத்துக்கொள்ள சொல்றாங்க வாப்பா. இத நா ஒத்துக்கொண்டா நா குற்றவாளி வாப்பா. செய்யாத குற்றத்த எப்படி வாப்பா ஒத்துக்கிறது' என மகன் கண்ணீரோடு கூறினார். மகன் குற்றத்த பாரமெடுக்க முடியாதெண்டு சொன்னதால, என்ன உடனே அனுப்பிட்டாங்க. மகன் எழுதின புத்தகத்தில் என்ன பிழை இருக்கிறது? அந்தப் புத்தகத்தில் அடிப்படைவாதம் இருக்கிறதா? அப்படி இருந்தால் அதனை நிரூபிக்க வேண்டும். துப்பாக்கியைப் படமாகப் போட்டு, தூக்கும் துவக்கு

'அது தாக்கும் நமக்கு
தூக்கிலாதோருக்கு ஒரு துவக்கு
அது எழுத்தில் இருக்கு
வெள்ளப்பெருக்கு, குருதிபெருக்கு
எனும் அவதிப்படும் மனிதருக்கு
அள்ளிக்கொடுத்து அயலாருடன் வாழப் பழகு'

என்ற கவிதையை மகன் எழுதியிருக்கிறார். இந்தக் கவிதையில் என்ன பிழை இருக்கு? இதில் எங்கு அடிப்படைவாதமும் பயங்கரவாதமும் இருக்கிறது?

மற்றொரு கவிதையில் எதிர்ப்பவர்கள், கிண்டலடிப்பவர்கள், தாழ்த்திப் பேசுபவர்கள் போன்றவர்களை நேருக்கு நேராக எதிர்த்து, துணிந்து வாழ்ந்து காட்டு என்கிறார். இப்படியான நல்ல சிந்தனையை தூண்டும் கவிதைகளை எனது மகன் எழுதியுள்ளார்.

"கொழும்பு, மெகசின் சிறைச்சாலையின் சி.ஆர். பி பிரிவில், மகன் இப்போது தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அங்கிருந்து நேற்றுமுன்தினம் (24) தொலைபேசியல் இரண்டு நிமிடங்கள் பேசினார். 'சிறைல நான் எழுதுன எழுத்துகள், என்ட குரானையும் பறிச்சிட்டாங்க வாப்பா' என்று மகன் கூறினார்" என அஹ்னப்பின் தந்தை கண்களில் கண்ணீர் தழும்பக் கூறினார்.

> எனக்குள்ள இருந்து, பயங்கரவாதம் உருவாக்கப்பட்டதாவும், அத நான் மாணவர்களுக்கு படித்துக்கொடுத்தேனென்டும் ஒத்துக்கொள்ள சொல்றாங்க வாப்பா. இத நா ஒத்துக்கொண்டா நா குற்றவாளி வாப்பா. செய்யாத குற்றத்த எப்படி வாப்பா ஒத்துக்கிறது

அஹ்னப் ஜஸீம் தொடர்பில், அவருடைய சட்டத்தரணியான சஞ்சய வில்சன் ஜயசேகரவுடனும் உரையாடினோம். அவர் கூறும் விடயங்கள் வருமாறு;

"அஹ்னப் ஜஸீம் கைது செய்யப்பட்டு, ஒரு மாதத்துக்குப் பின்னர், அவருக்கு எதிராக, அவரை ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ்வின் வழக்கோடு தொடர்புபடுத்தி, அஹ்னப்புக்கு எதிராக, கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இதன்போது அஹ்னப் எழுதிய 'நவரசம்' புத்தகத்தை மொழிப்பெயர்ப்பு செய்து, அது, சிறுவர்கள் மனதில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்துமெனக் கண்டறிவதற்கு, கொழும்பு லேடி ரிஜ்வே வைத்தியசாலையின் குழந்தைகள் மனநல மருத்துவரின் அறிக்கையைப் பெறுவதற்கான நீதிமன்ற உத்தரவை சி.ஐ.டியினர் பெற்றுக்கொண்டனர்.

இந்த வழக்கு விசாரணைகளில், அஹ்னப் ஜஸிமுக்காக கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றில் முன்னிலையாகி, அவருக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள சாட்சியங்களின் முழுமையான அறிக்கையை, நீதிமன்றில் சமர்ப்பிக்க வேண்டுமென நான் கோரிக்கை விடுத்திருந்தேன். இவ்வாறு நான் கோரிக்கை விடுத்ததன் பின்னர், சட்டமா அதிபர் திணைக்களத்தின் சார்பில் நீதிமன்றில் ஆஜரான அதிகாரி ஒருவரும், சி.ஐ.டியினரும் இந்த வழக்கை முன்கொண்டு செல்ல முடியாதென நீதிமன்றத்துக்கு அறிவித்திருந்தனர்.

மேலும், அஹ்னப்க்கு எதிரான வழக்கு ஒன்றை, பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர், புதுக்கடையில் உள்ள பிரதான நீதவான் நீதிமன்றில் தாக்கல் செய்துள்ளதாகக் கூறி அந்த வழக்கை, சி.ஐ.டியினர் நிறைவு செய்தார்கள். அஹ்னப் வாக்குமூலமொன்றை வழங்கத் தயாராகி வருவதாகவும், அவர் வாக்குமூலம் வழங்கும்போது, அவரை நீதிமன்றில் ஆஜர்படுத்துவோமெனவும் பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் நீதிமன்றத்துக்குத் தெரிவித்து வந்தனர்.

இந்தப் பின்னணியிலேயே டிஐடியின் கட்டுப்பாட்டில் கொழும்பில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அஹ்னப், ஏப்ரல் மாதம் தங்காலை தடுப்பு முகாமுக்கு மாற்றப்பட்டார். இதன்போது அவருக்கு வழங்கப்பட்ட சித்திரவதைகள் தொடர்பில், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு உள்ளிட்டவற்றில் முறைப்பாடு செய்திருந்தபோதிலும், எந்தவிதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

சர்வதேச ஆங்கிலப் பாடசாலை ஒன்றில் அஹ்னப் தமிழ் மொழி ஆசிரியராக இருந்தபோது, முஸ்லிம் மாணவர்களுக்கு, இஸ்லாமிய அடிப்படைவாதத்தைக் கற்பித்ததாகவே குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. அஹ்னப்பை தொடர்ந்து தடுத்துவைத்து, அவரை உளவியல் ரீதியாகப் பாதிப்படைய செய்து, அவர் மீது சுமத்தப்பட்டுள்ள போலியான குற்றச்சாட்டை, ஏற்றுக்கொள்ள வைக்க முயற்சிக்கிறார்கள்.

'நவரசம்' புத்தகத்தில் அடிப்படைவாதம் இல்லை. அப்புத்தகத்தில் ஐ.எஸ் பயங்கரவாதத்துக்கு எதிரான கருத்துகளே உள்ளன. இதனை மொழிப்பெயர்த்து நீதிமன்றத்துக்கு வழங்கியிருக்கிறோம். முஸ்லிம்களுக்கு எதிராக, அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் இனவாதப் போக்கின் அடிப்படையிலேயே அஹ்னப் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவுக்கு எதிரான வழக்கில், அஹ்னப்பை பயன்படுத்த அரசாங்கம் முயற்சிக்கிறது. அரசாங்கத்தின் இந்த ஜனநாயக விரோதப் போக்கு கண்டிக்கத்தக்கது. அஹ்னப்பை விடுதலை செய்வது தொடர்பில், அரசாங்கமே தீர்மானம் எடுக்க வேண்டும். இது ஓர் அரசியல் வழக்கு. அரசியல் ரீதியாக இந்த வழக்கில் தீர்மானங்கள் எடுக்கப்படும்" எனவும் தெரிவித்தார்.

> அஹ்னப்புக்கு வழங்கப்பட்ட சித்திரவதைகள் தொடர்பில், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு உள்ளிட்டவற்றில் முறைப்பாடு செய்திருந்தபோதிலும், எந்தவிதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை

123 பக்கங்களைக் கொண்ட 'நவரசம்' புத்தகமானது, அஹ்னப் பல்வேறு சந்தர்ப்பங்களில் எழுதிய கவிதைகளின் தொகுப்பாகவே உள்ளது. 'நவரசம்' என்ற புத்தகம், இறையன்பையும் பொறுமையையும் மனிதத்தையும் முக்கியத்துவப்படுத்துகிறது.

நவரசத்தில் 'யுத்தம்' பற்றிய அஹ்னப்பின் எழுத்துகள் அவரது முதிர்ச்சியை வெளிப்படுத்துவதாகவே உள்ளன.

யுத்தம் என்பது யாதெனில், ஆயுதம் கொண்டு மாத்திரம் செய்வதல்ல; 'அத்தனை பேரும் அதிர்ந்து நிற்க, உதிர்ந்திடாது உயர்ந்துடுவது யுத்தம்

என்கிறார் கவிஞர்.

'தண்ணீர்' என்ற தலைப்பில் அஹிம்சையையும் ஐக்கியத்தையும் பொறுமையையும் போதிக்கும் கவிஞர், பெரும்பாலானக் கவிதைகளில் மனிதத்தை நேசிக்கச் சொல்கிறார்

ஈஸ்டர் தாக்குதலின் பின்புலத்தில் ஐ.எஸ் பயங்கரவாதிகள் இருப்பதாக அரசாங்கம் கூறிவருகிறது. அப்படியிருக்க,

'ஐ.எஸ் பயங்கரவாதிகளின் முகத்தில்,
சாணம் கரைத்து ஊற்ற வேண்டும்; அவர்கள்
கண்ணத்தில் அறைய வேண்டும்; மார்க்கம்,
நபி வழி என்று ஐ.எஸ் பயங்கரவாதிகள்
உளறிக்கொண்டிருக்கிறார்கள்; அவர்களை
செருப்பால் அடிக்க வேண்டும்'

எனப் பயங்கரவாதிகளுக்கு எதிராகத் துணிச்சலாகக் கவிதை எழுதும் கவிஞனை, எப்படி ஒரு பயங்கரவாதியாகவும் அடிப்படைவாதியாகவும் பார்க்க முடிகிறது என்பது புரியாத புதிர்.

பயங்கரவாதத்துக்கு எதிராகவும் யுத்தத்துக்கு எதிராகவும் எழுதும் ஒரு கவிஞனை, அடிப்படைவாதியெனக் கூறிக் கைது செய்யுமளவுக்கு, நாட்டின் பாதுகாப்புத் துறை செயற்படுகின்றது என்பது அஹ்னப்பின் விடயத்தில் அப்பட்டமாகிறது.

# சந்தேகத்தைக் களை; சமுதாயத்தில் சேர்த்துகொள்; சகஜமாய் வாழ்

ஒவ்வொருவருடைய மனங்களிலும் சந்தேகம் எழுவது இயல்பானது. அச்சந்தேகங்கள் பலவகைப்படும். குடும்ப வாழ்வில் சந்தேகப்பட்டால், குடும்பமே சின்னாபின்னமாய் சுக்குநூறாகிவிடும். ஏனைய சந்தேகங்களை அவரவரின் தர்க்கத்துக்கு அமைவாக விட்டுவிடவேண்டும்.

பொசன் போயா தினத்தன்று, ஜனாதிபதியால் வழங்கப்பட்ட பொதுமன்னிப்பு, பல்வேறு தளங்களிலும் கண்டனத்துக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றன. ஆனால், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தின் ஊடாகத் தண்டனை விதிக்கப்பட்ட தண்டனைக் கைதிகள் 16 பேருக்கும் மன்னிப்பு அளிக்கப்பட்டுள்ளது. அச்செயற்பாட்டை அமெரிக்காவும் வரவேற்றுள்ளது.

மரண தண்டனைக் கைதியான துமிந்த சில்வாவுக்கு பொதுமன்னிப்பு வழங்கியது ஏன்? ஏனைய மரண தண்டனை கைதிகள், மிகுதியாக இருக்கும் அரசியல் கைதிகளின் நிலைமை என்ன? இந்த 16 பேருக்கு மட்டுமே மன்னிப்பளித்தது ஏன்? உள்ளிட்ட கேள்விகள் ஒவ்வொருவருடைய மனங்களிலும் எழாமல் இருக்காது. அக்கேள்விகளுக்கு பின்னால் சந்தேகமே ஒளிந்திருக்கும்.

ஒரு தீர்மானத்தின் மீது நிச்சயமின்மை, நம்பிக்கைக் குறைவு இன்றேல் உறுதிப்பாடில்லாத தன்மை இருக்குமாயின் அதுவே, 'சந்தேகம்' என வரைவிலக்கணப்படுத்தியிருக்கும் உளவியலாளர்கள், இது முற்றிப்போனால், நோயாகிவிடுமென எச்சரித்துள்ளனர். தமிழீழ விடுதலைப் புலிகளின் அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு, சூழ்நிலை குற்றவாளிகளாக்கப்பட்டு, சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருப்பவர்களில் 16 பேரே பொதுமன்னிப்பின் கீழ் விடுவிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் பெரும்பாலானவர்களின் தண்டனைக்காலம், இன்னும் 12 மாதங்களுக்கு உட்பட்ட மாதங்களில் நிறைவடையவிருக்கிறது.

பொதுமன்னிப்பு வழங்கப்பட்டிருக்காவிடினும் அவர்கள் விடுதலையாகியிருப்பர். அரசியல் காய்நகர்த்தலுக்குள் சிக்கி, சில மாதங்களுக்கு முன்னரே விடுதலையாகியுள்ளனர் என்பது மட்டுமே கசப்பான உண்மையாகும்.

சுமார் 15 வருடங்களுக்கு மேல் சிறைச்சாலைகளில் இருந்தமையால், சமூகத்துடனான பழக்கவழங்களில் அவர்களுக்கு பெரும் ஈடுபாடு இருக்காது; ஏன்? குடும்பத்தில் நெருகிய உறவினர்களைக் கூட மறந்திருக்கலாம்; பிள்ளைகளுக்குக் கூட ஞாபகமிருக்காமல் போயிருக்கும். அவற்றையெல்லாம் ஒருபுறமாக ஒதுக்கிவைத்துவிட்டு, இணைத்துக்கொள்ளுங்கள்; அந்நியனாகப் பார்க்கவேண்டாம்; சமுதாயத்தில் சேர்த்துக்கொண்டு, சகஜமாக வாழ்வதற்கு வழிசமைத்துக் கொடுக்கவேண்டும். தொழில்தேடிச் செல்லும் இடங்களில், 'சிறைக்குச் சென்றவன்' என விளித்து, புறந்தள்ளிவிடாது, அரவணைத்து வாழ்வதற்காக, தொழிலை கற்றுக்கொடுக்கவும்.

இவற்றுக்கெல்லாம் அப்பால், 'பயங்கரவாதி' என்ற சந்தேகத்தின் பேரில் மீண்டும் கைது செய்து, புலி முத்திரையைக் குத்தி, சிறைகளுக்குள் அடைத்துவிடக்கூடாது. அவ்வாறான நிலைமையொன்று ஏற்படுத்தப்படுமாயின் பொதுமன்னிப்பின் அர்த்தம் தவறானதாகிவிடும்.

சந்தேகத்தைக் களைந்து, சமுதாயத்தில் இணைத்துக்கொண்டு, சகஜமாய் வாழ்வதன் ஊடாகவே, இருட்டறைக்குள் ஒடுக்கப்பட்டிருந்த அவர்களின் வாழ்க்கைக்கும் ஒளியேற்றுவதாய் அமையும் என்பதை நினைவூட்டுகின்றோம்.




## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

வேண்டுமென்றே ஒருவர் நெஞ்சத்தை வருத்தினாலும், அதைத் தனது சிந்தையில் ஏற்காமல் உதறிவிடுபவர்கள், உறுதியான வீரர்கள்.

இல்லாத பழியை ஏற்க வேண்டிய அவசியம் இல்லை. ஒரு சின்ன விடயத்துக்கே மனம் பதறுபவர்கள், மிகப் பெரிய சதிகளுக்கு முகம் கொடுப்பது சந்தேகமானதுதான். பழிசுமத்துவது சிலருக்கு, எளிதான காரியம். தவறான வழியில் ஒருவரை வதைக்க எண்ணுவதுதன் பிரதிபலன், அவரை மக்கள் தூக்கி எறிந்து விடுவார்கள். தவறுகளை, எவரும் எப்படியும் செய்யலாம் என எண்ணுபவர்களை, இந்தச் சமூகம் தொடர்ந்து பார்த்துக்கொண்டிருக்காது. ஒரு சிலரால், பலரின் நிம்மதியைக் குலைக்க முடியுமா?

எவருக்கும் எவரையும் தண்டிப்பதற்கு உரிமை கிடையாது. மனிதர்கள், எதிர்ப்புகள், துரோகங்கள், அழிவுகள் மத்தியில் வாழவேண்டி இருக்கிறது. இந்த அனுபவங்களால் கிடைப்பது தெளிவும் பெருவெற்றியும் என்பதே நிதர்சனம்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கிழக்கு:

# மேய்ச்சல் தரை அத்துமீறல்



இல. அதிரன்

அரசியல் என்பது, நடுநிலைமையும் பொதுப்படையும் கொண்டதாக அமையப்பெற்றிருக்க வேண்டும். அது ஒருதலைப்பட்சமாக, பக்கச்சார்பாக முடிவுகள் எடுக்கப்படுகின்றபோது, திட்டங்கள் கொண்டு வரப்படும் பொழுது, முரண்பாடுகள் தோற்றம் பெறுகின்றன. இதற்கு நல்லதோர் உதாரணமே கிழக்கின் மேய்ச்சல்தரை அத்துமீறல்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப்பகுதியான மயிலத்தமடு, மாதவணை பிரதேசத்தில் தொடரும் பண்ணையாளர்களுக்கெதிரான செயற்பாடுகளைத் தடுப்புக்குரிய முயற்சிகளும், கவனயீர்ப்பு போராட்டங்களும் எதிர்ப்பு நடவடிக்கைகளும் நடைபெற்றுக் கொண்டே இருக்க அத்துமீறல்களும் தொடர்ந்தவண்ணமே இருக்கின்றன.

தமது கால் நடைகளைத் தேடிச் சென்ற பண்ணையாளர்கள் தாக்கப்படுவார்கள்; கைது செய்யப்படுவார்கள்; பண்ணை நடவடிக்கைகளுக்காக அமைத்திருக்கும் குடிசைகள் நாசம் செய்யப்படும்; கால்நடைகள் கொல்லப்படும்; கவரப்பட்டு கப்பம் கோரப்படும். இவ்வாறு பல இன்னல்களை அனுபவித்தபடியே, தங்களது கால்நடைகளைப் பாதுகாக்க வேண்டிய கட்டாயத்தில், மட்டக்களப்பு மாவட்டத்தின் பண்ணையாளர்கள் இருக்கிறார்கள்.

இவ்வாறான பிரச்சினைகள் காரணமாக, 'அரசே இன அழிப்பை மேற்கொள்ளாதே','மேய்சல் தரையை உறுதிப்படுத்து', 'எமது நிலம் எமக்கு வேண்டும்', 'மகாவலி என்ற போர்வையில், தமிழர் நிலத்தை ஆக்கிரமிக்காதே', 'பண்ணையாளர்கள் எம்மினத்தின் முதுகெலும்பு', 'சிங்களவர்களுக்குத் தனிச்சட்டம், தமிழர்களுக்கு வேறா' போன்ற கோஷங்கள், தமிழர்கள் மத்தியில் உருவாகத் தொடங்கியிருக்கின்றன.

மயிலத்தமடு, மாதவணை பிரதேசங்கள், மட்டக்களப்பு மாவட்டத்தின் தமிழ் பண்ணையாளர்கள், பாரம்பரியமாக மேச்சல் தரையாக பயன்படுத்திய பிரதேசமாகும். யுத்தம் முடிந்த கையோடு, இப்பிரதேசத்தில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தர்கள், விவசாய செய்கைக்காக குடியேறத் தொடங்கி, பல தடவைகள் வெளியேற்றப்பட்டும் இப்போதும் குடியேறுதலை நிறுத்தவில்லை. அதற்கு அரசியலும் அனுசரணை கொடுக்கிறது. இறுதியாக, கடந்த வருடத்தில் குடியேறினர். இவர்களது இச்செயற்பாடுகள் குறித்து, கிழக்கு ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டுவந்தபோதும் நிறுத்தப்படவில்லை.

இந்த நிலையில், தமது விவசாய நிலத்துக்குள் கால்நடைகள் புகுந்து, பயிர்களை நாசமாக்குவதாகத் தெரிவித்து, கால்நடைகளை வெட்டி உயிரிழக்கச் செய்ததுடன் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த பண்ணையாளர்களும் தாக்கப்படுகின்ற நிலைமை தொடர்ந்து இடம்பெற்று வருகிறது.

மட்டக்களப்பு மாவட்டப் பண்ணையாளர்களின் மேய்ச்சற்றரையாக விளங்கும் மாவட்டத்தின் எல்லைப்புறப் பிரதேசங்களான மாதவணை மற்றும் மயிலத்தமடு பிரதேசங்களில், அம்பாறை, பொலனறுவை மாவட்டங்களில் இருந்து அத்துமீறிக் குடியேறுபவர்களது நெருக்குவாரங்களை தாங்கிக்கொண்டு, வாழ்வாதாரத்துக்காக காலம் கடத்தும் நிலையில், மட்டக்களப்பின் பண்ணையாளர்கள் இருக்கிறார்கள்.

இவ்விவகாரம் தொடர்பில், உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதையடுத்து, கடந்த பெப்ரவரி மாதம் 28ஆம் திகதியுடன் அங்கிருந்து சேனைப் பயிர்ச்செய்கையாளர்கள் விலகிச் செல்ல வேண்டும் என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இருப்பினும் அது நடைபெறவில்லை. மே 12ஆம் திகதி மீண்டும் வழக்கு எடுத்துக் கொள்ளப்படவிருந்த நிலையில், கொரோனா நிலைமை அதைப் பிற்போட்டிருக்கிறது.

மட்டக்களப்பு மாவட்டப் பண்ணையாளர்கள் அங்கிகரிக்கப்பட்ட மேய்ச்சல் தரையின்றி, இடர்களை எதிர்நோக்குகின்றார்கள். மேய்ச்சற்றரையாகப் பயன்படுத்தப்படும் மயிலத்தமடு, மாதவணை பிரதேசத்தில் அதிக பிரச்சினைகளும் ஆபத்துகளும் எதிர்நோக்கப்படுகின்றது. அம்பாறை, பொலனறுவை மாவட்டத்தைச் சேர்ந்தோர், இப்பிரதேசங்களில் அத்துமீறுவோர், நிரந்தரமாக வெளியேற்றப்பட வேண்டும் என்பது பண்ணையாளர்களது கோரிக்கையாகும்.

போர்க்காலத்துக்கு முன்பும் இவ்வாறான அத்துமீறல்கள் காணப்பட்டிருந்தாலும், போர் முடிந்த கையோடு 2008 - 2009இல் அத்துமீறிக் குடியேறினார்கள். இவர்களை வெளியேற்றுவதற்கு கிழக்கு முதலமைச்சர் ஆளுநர்களால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அப்போது பயனளிக்கவில்லை. 2015இல் ஆட்சி மாற்றத்தையடுத்து 2016இல் அத்துமீறல் செய்த 99 பேருக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டதோடு, நீதிமன்றக் கட்டளையின் அடிப்படையில் அவர்கள் அனைவரும் வெளியேற்றப்பட்டார்கள். இந்த நடவடிக்கைகள், மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் ஒத்துழைப்புடன் நடைபெற்றன.

கிழக்கு மாகாண சபை 2017 செப்டெம்பரில் கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து, அத்துமீறுவோரின் நடவடிக்கைகள் மீண்டும் நிகழ ஆரம்பித்தன. இப்போது வரை தடுத்து நிறுத்த முடியவில்லை; பரவிக்கொண்டே இருக்கிறது.

மாவட்டத்தில் மேய்சல் தரை இல்லாத நிலையில், பல தடவைகளில் நிரந்தரமான மேய்ச்சல் தரைக்காக வர்த்தமானி அறிவித்தலை வெளியிட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும் அது நிலைவேறாது போயிருக்கிறது. 'நாமெல்லோரும் இலங்கையர்கள்' என்ற அடிப்படையிலும், இலங்கையர் எல்லோர் தொடர்பிலும் சட்டங்கள் பாராபட்சமின்றிப் பிரயோகிக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையிலும்தான் இந்த விடயம் பார்க்கப்பட வேண்டும். ஆனால், அது சாத்தியப்படுவதாக இல்லை.

மயிலத்தமடு, மாதவணை பகுதிகளில் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டிருந்த கால் நடை வளரப்பாளர்கள் வனவளத் துறையினரால் கைது செய்யப்படுவதும், இலட்சம் ரூபாய் பெறுமதியான கால்நடைகள் சுட்டுக்கொல்லப்பட்டு உணவாக்கப்படுவதும், கட்டப்பட்டு பணம் வசூலிக்கப்படுவதும் நடைபெறும் போது, பிரச்சினைகள் முற்றும் நிலையே உருவாகின்றது. கடந்த காலங்களில் 1,000க்கும் மேற்பட்ட மாடுகள் கொல்லப்பட்டும், பிடிக்கப்பட்டும், சித்திரவதைகளுக்கு உள்ளாகியும் உள்ளன.

1974ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து, மட்டக்களப்பு மாவட்டத்தில் மேய்ச்சல் தரையாகப் பயன்படுத்தப்பட்டு வரப்படும் பிரதேசமே மயிலத்தமடு, மாதவணைப் பிரதேசமாகும். மாதவணை, புதிய மாதவணை, மயிலத்தமடு, மாந்திரியாற்றுப் பகுதி என்னும் இடங்களிலுள்ள 3,000 ஏக்கர் மேய்ச்சல் தரைக் காணிகளை பொலநறுவை, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு 2014ஆம் ஆண்டு இறுதிப்பகுதியில் விவசாயச் செய்கைக்கு வழங்குவதற்கு வனவள திணைக்களத்தினர் நடவடிக்கை எடுத்திருந்ததாக அறிய முடிகிறது. அது பல்வேறு முயற்சிகளால் நிறுத்தப்பட்டாலும், கிழக்கு ஆளுநரால் கடந்த வருடத்தில் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டது. மேய்ச்சல் தரை நிலங்களை விவசாயத்துக்கு வழங்கும் திட்டத்தைத் தடுக்கும் வகையில் தமிழ் அரசியல்வாதிகளால் மேற்கொள்ளப்பட்ட பல முயற்சிகளின் பின்னர், நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

மாதவணை, மயிலத்தமடு பிரதேசத்தில் எமது பாட்டன், முப்பாட்டன் காலத்தில் இருந்து, எமது கால்நடைப் பண்ணையாளர்கள் கால்நடைகளை மேய்த்து வருகின்றார்கள். தற்போது மகாவலி என்ற பெயரிலே சிங்களக் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. இங்கு எமது கண்முன்னே எமது கால்நடை வளர்ப்பாளர்களின் வாடிகள் எரிக்கப்பட்டும், கால்நடைகள் கொல்லப்பட்டும் வருகின்றன. அப்பிரதேசத்தில் இருந்து கால்நடைகள் விரட்டியடிக்கப்பட்டமையினால் எமது விவசாய நிலங்களில் மாடுகள் நிறைந்து காணப்படுகின்றன. இவற்றால் எமது பல நூற்றுக் கணக்கான விவசாய நிலங்களும் பயிர்களும் அழிவடைந்துள்ளன. அழிவடைந்து வருகின்றன என்பது விவசாயிகளது கருத்தாக இருக்கிறது.

விவசாய ஆரம்பக் கூட்டங்களிலே விவசாய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் கால்நடைகளை அதற்கு ஒதுக்கப்பட்ட இடமான மயிலத்தமடு, மாதவணை என்ற இடத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும் என்று தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் அங்கே கால்நடை வளர்ப்பாளர்களுக்கு சிங்கள இனத்தவர்கள் அச்சுறுத்தல், மிரட்டல்களை மேற்கொண்டு அச்சமூட்டப்படுகின்றது. அதனால் கால்நடைகளை விவசாயப்பகுதிகளான தங்களது பகுதிகளிலேயே வைத்திருக்கவேண்டிய நிலை ஏற்படுகிறது.

அந்தவகையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் விவசாயம் செய்ய வேண்டுமாக இருந்தால், பண்ணையாளர்களின் பிரச்சினைக்கு தீர்வு காணப்படாது போனால் விவசாயத்தைக் கைவிட்டுச் செல்வதை விட வேறு வழி இருக்காது என்பது விவசாயிகளது இப்போதைய நிலைப்பாடு.

பறிபோய்க்கொண்டிருக்கின்ற பண்ணையாளர்களின் நிலங்களை விடுவித்து அவர்களை அப்பிரதேசத்தில் கால்நடைகளை மேய்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்ற போதே கால்நடைகளின் பிரச்சினைகளின்றி விவசாய நடவடிக்கையை மேற்கொள்வதற்கும் வழி ஏற்படும். அது இதய சுத்தியுடனான பரஸ்பர விட்டுக் கொடுப்புடனும் ஏற்றுக் கொள்ளலுடனும் நடைபெற்றாக வேண்டும்.

மாவட்டத்தின் மேய்ச்சல் தரையானது பொதுப்பிரச்சினையாக இருந்த போதிலும் மேய்ச்சற்றரை போன்ற பல பொதுப் பிரச்சினைகளில் மட்டக்களப்பு மாவட்டத்தின் அரசுசார் மக்கள் பிரதிநிதிகள் கவனம் கொள்வதாகத் தெரியவில்லை. இதில் மாற்றம் ஏற்படுமெனில் சிறப்பானதொரு நிலைமையைத் தோற்றுவிக்கமுடியும்.

நியாயத்துக்கும் நடுநிலைமைக்கும் வித்தியாசம் இருக்கிறது என்ற வகையில், நியாயங்கள் பேசப்படவேண்டும்.

## கடிதங்கள்

### நவீன சிறுவர் நிலையங்கள்:

## மொனராகலை பெருந்தோட்டங்கள் புறக்கணிப்பு

பெருந்தோட்ட பகுதிகளில் வாழும் குழந்தைகளின் பாதுகாப்பையும் சிறந்த எதிர்காலத்தையும் கருத்தில் கொண்டு, தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சும் மகளிர், சிறுவர் அபிவிருத்தி அமைச்சும் இணைந்து, சிறுவர் நிலையங்களை அமைத்து வருகின்றன.

இவ்வாறான சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள், நவீன வசதிகளுடன் கூடியதாக குழந்தைகளின் பாதுகாப்பு அவர்களின் எதிர்காலம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டமைந்த விசேட செயற்றிட்டமாகும்.

இந்த நவீன சிறுவர் நிலையங்கள், காலி, நுவரெலியா, ஹட்டன், கேகாலை, கண்டி, இரத்தினபுரி, பதுளை ஆகிய பிராந்தியங்களில் அமைக்கப்பட்டுள்ள போதும் மொனராகலை பெருந்தோட்ட பகுதியில் ஒரு சிறுவர் அபிவிருத்தி நிலையமேனும் அமைக்கப்படவில்லை என விசனம் தெரிவிக்கப்படுகிறது. ஏன் இந்த ஓரவஞ்சகம் எனவும் கேள்வி எழுப்பப்படுகின்றது.

மொனராகலை பெருந்தோட்டங்களாகிய பாராவிலை, கும்புக்கனை, வெள்ளச்சிகடை, பவ்முப்பனவெளி, பவ்நக்கலை, மரகலை, அலியாவத்தை, சிரிகலை, சிங்காரவத்தை போன்ற ஒன்பது தோட்டப்பிரிவுகளை உள்ளடக்கிய சுமார் 1,500க்கும் மேற்பட்ட தோட்டத்தொழிலாளர்கள் வாழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கது.

இறப்பர் தோட்டங்களில் தொழில் செய்யும் தாங்கள் பிள்ளைகளைப் பாதுகாப்பாக விட்டுச்செல்ல, முறையான சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் இன்மையால் பாரிய சிரமங்களுக்கு உள்ளாவதாகத் தெரிவிக்கின்றனர். ஆகவே, சிறுவர் அபிவிருத்தி நிலையங்களை மொனராகலை பெருந்தோட்ட பகுதிகளிலும் அமைக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

–ஜயகுமார் ஷான்

### நோய்கள் குறைந்தாலும் விளைச்சல் அதிகரிக்குமா?

# சரிகள் பிழைகளாகின்றன





றம்ஸி குத்தூஸ்
ramsykuddoos@gmail.com

அரசாங்கத்தின் சேதனப் பயிர் செய்கை திட்டத்தில் 'நஞ்சற்ற உணவு' எனும் திட்டத்தைப் பாராட்டினாலும் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு எந்தவொரு தீர்வையும் முன்வைக்காமல், இத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்வது, பல பாதகமான விளைவுகளை ஏற்படுத்தி வருகின்றது.

நாட்டின் முதுகெலும்பெனக் கூறப்படும் விவசாயிகளின் நலன்களில் அக்கறை காட்டாமல், அவர்களின் பிரச்சினைகளைச் செவிமடுக்காமல், திட்டத்தை அமல்படுத்த நடவடிக்கை எடுப்பது, கவலை தரக்கூடிய விடயமாகும்.

குறிப்பாக, சேதனப் பசளை தொடர்பான பயன்பாட்டில், எவ்வாறு வெற்றி அடையலாமென்பது பற்றி, முறையாகவும் பூரணமாகவும் விவசாயிகளை, அரசாங்கம் தெளிவுபடுத்தவில்லை என்ற குற்றச்சாட்டை விவசாயிகள் முன்வைக்கின்றார்கள்.

இரசாயன பயிர்ச்செய்கையில் மூழ்கிப்போயுள்ள விவசாயிகள், சேதனப் பசளை என்றதும், அவர்கள் வேளாண்மை செய்யும் காலத்தைக் கணிப்பீடு செய்வதையும் விளைச்சலின் வினைத்திறனையும் தான் பார்க்கிறார்கள். அதுதான் யதார்த்தமானது; அதில் தவறில்லை.

உதாரணமாக, ஒரு போகத்தின் காலம் சுமாராக மூன்றரை மாதம் (ஏறக்குறைய 105 நாள்கள்) என வைத்துக்கொண்டால், இக்காலப்பகுதியைத் திட்டமிட்டு வைத்துக் கொண்டே விவசாயிகள், நெற்பயிர் செய்கையில் ஈடுபடுவார்கள்.

இதன்போது, முதற்றடவையாக உழுது விட்டு, விதைப்பு வேலை நடைபெறும். பின்னர், நிலத்தில் காணப்படும் ஈரப்பதனுக்கு ஏற்றாப்போல், நீர் தேவையென்றால், நீரைக்கட்டுவார்கள். இல்லாவிட்டால், அவ்வாறே, விடுவார்கள். குறிப்பட்ட நாள்கள் சென்ற பின்னர், பயிர் வளர ஆரம்பமாகும். இந்த நேரத்தில், முறையற்ற விதத்தில் பயிர் வளரும். அதாவது, சில இடத்தில் கட்டையாகவும், சில இடத்தில் வளராமலும் இருக்கும்.

அந்த நாள்களில், விவசாயிகள் நிலத்துக்குத் தேவையான பசளைகளைக் கொடுக்க வேண்டும். இதன்போது, நெற்பயிருக்கு யூரியா எனும் பசளையைப் பாவிப்பார்கள். பிறகு, குடளைப் பருவத்துக்கான பசளையைப் பயன்படுத்துவார்கள். இக்குடளைப் பசளை பாவிப்பதால்,நெற்பயிர் வீரியமடைந்த நிறைவான நெல் மணிகளைத் தரும். இவ்வாறு பாவிக்காவிட்டால், நெல்லின் நிறைகளில் மாற்றங்கள் ஏற்படும்.

இதேவேளை, இங்கு பாவிக்கப்படும் நிலப்பசளைக்கு '*TSP*', யூரியா, பொட்டாசியம் என மூன்று வகைப் பசளைகளைப் பாவிப்பார்கள். இதனால் பயிரின் வளர்ச்சி, மிக வேகமாக இருக்கும். இதில் விசேடம் என்னவென்றால், இவை பயன்படுத்தப்படும் போது, பயிர்கள் பச்சைப்பசேல் என பூரணத்துவமாகச் சிறப்புடன் காட்சியளிக்கும்.

இதேவேளை,சில பயிர்கள் ஆங்காங்கே வளராமல், இருக்கும் நிலையில், அவற்றை வளர்ச்சியடையச் செய்வதற்காக 'உப்பு எண்ணெய்'யைப் பயன்படுத்துவார்கள். இதனால், உடனடியாகப் பயிர்கள் அடர்த்தியாக வளரும். இதன்போது, வெயில் தாக்கத்தால், பயிரில் பச்சையத் தன்மை இழக்கப்படும் சாத்தியக்கூறுகள் இருப்பதால், 'ஹைதரோகொம்பஸர்' எனும் இரசாயனத்தைப் பாவித்தால், அது பச்சையத்தை வெளிப்படுத்தும்.

இவ்வாறு, இரசாயனம் அதிகமாகப் பாவிக்கப்பட்டாலும் விவசாயிகள் நெற்பயிரின் தன்மையில் மகிழ்ச்சியடைவார்கள். இந்த விவசாயத்தில் அசேதனப் பசளைகளை (இரசாயனம்) பயன் படுத்தி, அதிக விளைச்சலைப் பெறுவார்கள். இதேவேளை, 'டிஸ்கவரி, அல்ட்டா' போன்ற இரசாயனங்களைப் பயன்படுத்துவதால்,நெற்பயிர்கள் (வாட்டசாட்டமாக) சிறந்து காணப்படும்.

இவ்வாறான வழமைகள் காணப்படும் சந்தர்ப்பத்தில், சேதனைப் பசளை திட்டம் அறிமுகம் செய்யப்படுவதால், விவசாயிகள் குழப்படைந்து காணப்படுகின்றார்கள். சேதனப் பசளை மூலம் மட்டுமே, நெற்செய்கை பண்ணப்பட்டால், பயிரின் வளர்ச்சியில் ஏற்படும் பாதிப்பை, எவ்வாறு நிவர்த்தி செய்வது என்பது குறித்து அரசாங்கம் எந்தவித தெளிவுபடுத்தல்களையும் வழங்கவில்லை என்பது கவலைக்குரிய போக்காகக் காணப்படுகின்றது.

தற்போதைய நிலையில், விவசாயிகள் சேதனப் பசளையைப் பயன்படுத்தினால் விளைச்சல் குறையலாமெனவும், சிலநேரங்களில் வழமையான காலத்தை விட வும் அதிகமான காலத்தை எடுக்கக் கூடியதாகவும் இருக்கலாமெனவும் விவசாயிகள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

இரசாயப் பசளைப் பாவனைக்குப் பழக்கப்பட்ட தற்போதுள்ள நிலங்களில், சேதனப் பசளை உடனடியாகப் பயன் அளிக்காதெனத் தெரிவிக்கும் விவசாயிகள், சேதனப் பசளை, நிலத்தைச் சேர்வதற்கு சுமார் ஒன்று அல்லது ஒன்றரை வருடங்கள் செல்லலாமெனவும் தெரிவிக்கின்றனர். அதாவது, குறைந்தது மூன்று போகங்கள் செல்லக்கூடிய வாய்ப்புகள் இருக்கலாமெனவும் தெரிவிக்கின்றார்கள்.

இதேவேளை, பயிர்ச் செய்கையின்போது இரசாயனங்கள் அதிகமாகப் பாவிப்பதால், மக்களுக்கு நோய் அதிகமாக ஏற்படுகின்றன என்ற குற்றச்சாட்டையும் விவசாயிகள் ஏற்றுக் கொள்கின்றனர்.

இது இவ்வாறு இருக்கையில், சேதனப்பசளைப் பயன்பாட்டில், நெற்பயிர்களுக்கிடையே காணப்படும் இடைவெளிகளை, எவ்வாறு சீர் செய்வதென்பது பற்றி, விவசாயத் திணைக்களமோ அது சார்ந்த திணைக்களங்களோ இதுவரையில் விவசாயிகளுக்கு தெளிவுபடுத்தவில்லை. நெற்கதிர்கள் நிறையில் வேறுபாடாக இருக்கும்போது, எவ்வாறான நடவடிக்கைளை எடுப்பது குறித்தும் விவசாயிகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்படவில்லை.

நெற்கதிர்கள் முதிர்ச்சியடையவில்லை என்றால், இதற்கு என்ன செய்வது என்பது குறித்த பூரண அறிவுறுத்தல்கள் இல்லை. உதாரணமாக, ஒரு விவசாயிக்கு ஒரு ஏக்கர் நெற்காணியில் சுமாராக 35 - 40 மூடைகள் நெல் விளைச்சல் கிடைக்கும். இது சாதாரணமாக, அசேதனப் பசளை பாவிப்பதால் கிடைப்பதாகும். இதேவேளை, சேதனப் பசளை

> **அசேதனப் பசளைகளுக்குப் பழக்கப்பட்டள்ள நிலங்களில், சேதனப் பசளை உடனடியாகப் பயன் அளிக்காது என்பதுடன் அது, நிலத்தைச் சேர்வதற்கு சுமார் ஒன்று முதல் ஒன்றரை வருடங்கள் செல்லலாம் என்கின்றனர் விவசாயிகள்**

பயன்பாடின்போது, இதனைவிடக் குறைவான அறுவடையைத்தான் எதிர்பார்க்க முடியும் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

எனவே, அதிகப்படியான விளைச்சலை, சேதனப் பசளை மூலம் எப்போது பெறலாமென விவசாயிகள் கேள்வி கேட்கின்றனர். தற்போது அரசாங்கம் சேதனப் பசளையை எவ்வாறு பங்கீடு செய்யப்போகின்றது? சில பிரதேசத்திலுள்ள மண்ணின் வகையில், இதன் விளைச்சல் தன்மை எவ்வாறு இருக்கும் என்பது குறித்த கேள்வியும் எழுகின்றது.

சில நிலங்கள், அதிமான களிமண் தன்மையுடன் காணப்படுவதால் சேதனப்பசளை எவ்வாறு பயன்தரும்? சில பிரதேசம் மணல் நிலமாகக் காணப்படும். இதில் சாதாரணமாக விளைச்சல் குறைவாகவே காணப்படும். இதற்கு, சேதனப் பசளை எவ்வாறு கைகொடுக்கும்? இதற்கான விளக்கங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்படவில்லை.

சேதனப்பசளை முறைமை, கைகொடுக்காத சந்தர்ப்பத்தில், அரசாங்கம் விவசாயிகளுக்கு என்ன பதில் சொல்லப்போகின்றது? ஊக்குவிப்புக்கு சேதனப்பசளையை எந்த அடிப்படையில் செயற்படுத்தப்போகின்றது.

பயிர்களில் பூச்சிகள் காணப்படும்போது, இரசாயனப் பதார்த்த பூச்சிகொல்லிகளைக் கொண்டு அதனை இல்லாமல்செய்கின்றனர். இப்போதுள்ள சேதனப்பசளை முறையில் செய்யும்போது, பூச்சிகளின் தொல்லைகளுக்கு எவ்வாறான தீர்வுகள் உள்ளன? இவற்றுக்கான முழுமையான பதில் முறையாகக் கிடைக்காததால் விவசாயிகள் பெரும் திண்டாட்டத்தில் உள்ளனர்.

இவை இவ்வாறு இருக்க, ஆரோக்கியமான சந்ததியை உருவாக்குவதற்கு, சேதனப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவது காலத்தின் தேவையாகி உள்ளதுடன், அதற்கான முறையான வேலைத்திட்டமொன்றை ஏற்படுத்துவது முக்கியமாகும் என அரசாங்கம், தெரிவித்துள்ளது.

சுமார், 60 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக பயிர்ச்செய்கைக்கு அசேதன உரவகைகளுக்குப் பழக்கப்படுத்தப்பட்டு உள்ளமையால், மக்களின் ஆரோக்கியம் மோசமடைந்துள்ளதாக இலங்கையிலுள்ள வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர்.

பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்தப்படும் இரசாயனப் பொருட்கள் காரணமாக, சேதனப் பயிர்ச்செய்கைக்கு உதவும் நுண்ணுயிர்கள் நாசமாக்கப்பட்டு உள்ளதுடன், நீர், சூழல் மாசுறுதல்களும் அதிகரித்து உள்ளதாகவும் சுமார் 200 நச்சுப் பொருட்கள் நாட்டுக்கு கொண்டு வரப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அசேதன உரப் பாவனை காரணமாக, சிறுநீரக நோயாளர்கள், புற்று நோயாளர்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும் குழந்தைகளின் ஊட்டச்சத்து குறைப்பாடு, ஊனமுற்ற குழந்தை பிறப்பு என்பவற்றுக்கும் காரணமாகியுள்ளதாக வைத்தியர்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

எனவே, விவசாயிகளுக்கு முறையாக சேதனப்பசளை முறை விளங்கப்படுத்துவது அரசாங்கத்தின் கடமையாகும்.




# கொரோனாவை உணர்ந்த 'யூட்'



வ. சக்தி

"நான் மோட்டார் சைக்கிளை எடுத்ததும், உடனே 'யூட்' ஓடி வந்து முன் இருக்கையில் (பெற்றோல் தாங்கி) ஏறிவிடுவான். வீட்டில் நானும் யூட்டும் மட்டுமே வசித்து வருகின்றோம். எனது வேலைகளில் அரைவாசியை யூட்தான் செய்கின்றான். எனக்கு சோப் எடுத்து வருதல், மரக்கறிகளை எடுத்துவருதல், திருவலை போன்ற பொருட்களையெல்லாம் எடுத்துத்தந்து உதவி செய்வான். என்னோடுதான் தினமும் தூங்குவான். அவனுக்கென நான் பிறிம்பாக சோப், மாஸ்க், சிக்னல் பிறஸ், தலையணை அனைத்தும் வைத்திருக்கின்றேன்" என்கிறார் மட்டக்களப்பு மாவட்டம், படுவாங்கரைப் பகுதியின் போரதீவுப் பற்றுப் பிரதேசத்திலுள்ள பழுகாமத்தைச் சேர்ந்த செல்லையா சிவனேசராசா.

மட்டக்களப்பிலிருந்து பழுகாமம் நோக்கி, கல்முனை பிரதான வீதியினூடாக, மோட்டார் சைக்கிளில் செல்லையா சிவனேசராசாவும் அவரது செல்வப்பிராணி யூட்டும் பயணிக்கும் காட்சியை தினமும் காணலாம்.

ஐந்து வருடங்களாக, செல்லப்பிராணியாக வளர்க்கும் ஆண் நாயை, தான் செல்லும் இடமெல்லாம் கூட்டிச் செல்வதாகவும் தான் சொல்வதைக் கேட்பதுடன் பிறர் கூறுவதையும் புரிந்துகொண்டு நடக்கக் கூடிய நன்றியுள்ள செல்லப்பிராணியாக 'யூட்' திகழ்வதாகவும் கொரோனா வைரஸ் கொடிய தொற்றிலிருந்து பாதுகாப்பதற்கு ஏற்ற வகையில், தானும் தனது யூட்டும் அல்லும் பகலும் முகக்கவசம் அணிந்து கொள்வதாகவும் அவர் கூறுகின்றார்.

செல்லையா சிவனேசராசா தனது செல்லப்பிராணி யூட் குறித்து மேலும் பெருமையுடன் கூறியதாவது: "நான் தினமும் பழுகாமத்திலிருந்து மட்டக்களப்புக்கு, மகளின் வீட்டுக்குச் சென்று வருகின்றேன். இது ஏறக்குறைய 60 கிலோ மீற்றர் தூரமாகும். நானும் யூட்டும் மோட்டார் சைக்கிளில் பயணிக்கும் போது, பலர் எம்மைப் புதினம் பார்ப்பார்கள். சிலர், எம்மை நிறுத்தி, விசாரிப்பார்கள். ஏன் தினமும் நாயைக் கொண்டு செல்கின்றீர்கள், எங்கிருந்து போகின்றீர்கள் என கேட்பார்கள். நான், எனது யூட் பற்றிச் சொன்னதும் அப்படியா? என வாயில் கைவைப்பார்கள்.

"எனது யூட் யாருக்கும் ஒன்றும் செய்யமாட்டான். ஆனால், என்னை யாரும் அதட்டினால், அது யூட்டுக்கு விளங்கிவிடும்;




> **எனது 'யூட்' யாருக்கும் ஒன்றும் செய்யமாட்டான். ஆனால், என்னை யாரும் அதட்டினால், அது யூட்டுக்கு விளங்கிவிடும்; கோபம் வந்துவிடும்; உடனே கௌவி விடுவான். இவ்வாறு ஒரு நாள், மட்டக்களப்பு பஸ் நிலையத்தினூடாகப் பயணித்துக் கொண்டிருந்தபோது.....**

கோபம் வந்துவிடும்; உடனே கௌவி விடுவான். இவ்வாறு ஒரு நாள், மட்டக்களப்பு பஸ் நிலையத்தினூடாகப் பயணித்துக் கொண்டிருந்தபோது, போக்குவரத்து பொலிஸார் நிறுத்தி, 'இவ்வாறு நாயை கொண்டு செல்லக்கூடாது' என என்னை அதட்டினார்கள். உடனே, யுட் பாய்ந்து சென்று, அதட்டிய பொலிஸின் கையைக் கௌவி விட்டான்.

இன்னொரு நாள், பொலிஸ் நிறுத்தி, நாய்க்கு 'மாஸ்க்' அணிய வேண்டும் எனத் தெரிவித்தார்கள். உடனே பக்கத்து கடையில் 'மாஸ்க்' ஒன்று வாங்கி யூட்டுக்கு அணிவித்தேன். 'வேண்டாம்' எனத் தலையசைத்தான். 'பொலிஸ் அடித்துவிடுவார்கள்; போடடா' எனச் சொன்னேன். உடனே போட்டுவிட்டான்.

"நான் எதைச் சொன்னாலும், நான் பெற்ற பிள்ளையைப்போல் கேட்டுக் கொண்டு, என்னுடன் சேர்ந்தே வாழ்ந்து வருகின்றான். மட்டக்களப்பிலுள்ள மகளின் வீட்டுக்குச் சென்றால், அங்கு சில வேளைகளில் தங்கி விடுவோம். எனது பேரப்பிள்ளைகளுடன் யூட் பழகிவிட்டான். எனது பேரப்பிள்ளைகள் ஆங்கிலத்தில் கதைப்பார்கள். யூட்டுக்கு தமிழுடன் ஆங்கில மொழியும் நன்றாக விளங்கும். உதாரணமாக, தலையணை என்பதை விட 'பிலோ' என்றால் நன்றாகப் புரிந்துவிடும்" என்கிறார்.

செல்லையா சிவனேசராசா, சமூகத்துக்கு முன்னுதாரணமாக விளங்கும் ஒருவர் எனலாம். தற்கால கொரோனா அச்சத்தின் மத்தியில் மனிதர்கள் மாத்திரமின்றி மிருகங்களுக்கும் கொரோனா வைரஸ் பரவி வருகின்ற நிலையில், தான் வளர்க்கும் செல்லப் பிராணிக்கும் மனிதர்களைப் போன்று, தினமும் குளிக்க வைத்து, பல்துலக்கி, முகக்கவசம் அணிந்து செல்லமாகவும் பாதுகாப்பாகவும் வளர்த்து வருவது எடுத்துக்காட்டாகும்.

சுகாதாரத் துறையினர் தெரிவிக்கும் கருத்துகளைச் செவிசாய்க்காதவர்கள், இனிமேலாவது செல்லப் பிராணிகளிடத்தில் இருந்தாவது நற்பண்புகளையும், பழக்க வழக்கங்களையும் கற்றுக் கொள்வது காலத்தின் கட்டாயமாகும்.

குறிப்பாக, இத்தொற்றிலிருந்து ஒவ்வொருவரும் தங்களையும் தங்களைச் சூழவுள்ளவர்களையும் பாதுகாப்பதற்கான உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாமையே பெருமளவான வைரஸ் பரவலுக்கும் உயிரிழப்புகளுக்கும் காரணமாக அமைந்துள்ளன.

இருந்தும், மனிதர்களிடத்திலும் உயிரினங்களிடத்திலும் இத்தொற்று நோய் பரவாமல் இருப்பதற்கு, பாதுகாப்பான வகையில் செயற்படக் கூடிய ஒரு சில சமூக சிந்தனை கொண்ட நபர்களும் ஆங்காங்கே உலாவுவதையும் அவதானிக்க முடிகின்றது.

வீதிகளில் செல்லும் பொதுமக்கள்கூட, முகக் கவசத்தை அணியத் தவறுகின்ற இந்தக் காலத்தில், கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளுமளவுக்கு தனது உயிர் எந்தளவுக்கு முக்கியமானதோ, அதேயளவு தனது செல்லப் பிராணியான யூட்டின் பாதுகாப்புக் குறித்தும் அக்கறையுடன் செயற்படுவது குறித்து, மெச்சப்பட வேண்டும்.

ஏனைய அரசியல் கைதிகளையும்

# ‘விரைந்து விடுவியுங்கள்’

## விடுதலையானவரின் உருக்கமான கோரிக்கை

■ எம்.றொசாந்த்

“பொது மன்னிப்பில் விடுவிக்கப்பட்ட எம்மைப் போன்ற உறவுகள், இன்னமும் சிறைகளில் உள்ளனர். அவர்களையும் மிக விரைவில் விடுவிக்க வேண்டும்” எனப் பொது மன்னிப்பின் கீழ் விடுவிக்கப்பட்ட அரசியல் கைதிகளில் ஒருவரான சூரியகாந்தி ஜெயச்சந்திரன், உருக்கமாக கோரிக்கையை விடுத்துள்ளார்.

“எங்களது விடுதலைக்காகக் குரல் கொடுத்த மக்களுக்கும் எமது விடுதலைக்காகச் செயற்பட்டவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம் என்றும் அவர் தெரிவித்தார்.



பொசனை முன்னிட்டு ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் மூலம், தமிழ் அரசியல் கைதிகள் 16 பேர், நேற்று முன்தினம் (24) விடுவிக்கப்பட்டனர்.

அவர்களில், யாழ்ப்பாண சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சூரியகாந்தி ஜெயச்சந்திரனும் விடுவிக்கப்பட்டார்.

இவர் விடுதலையாகி, குடும்பத்துடன் இணைந்த பின்னர், ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், “பலர் செய்யாத குற்றங்களுக்காக, நீண்டகாலமாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவரையும் விடுவித்து , அவர்களையும் சமூகத்துடன் வாழ வைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்” என்றார்.

சூரியகாந்தி ஜெயச்சந்திரன், 2009ஆம் ஆண்டு மே மாதம் 17ஆம் திகதி பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பல நாள்களாக எழுதப்பட்ட

# ‘திரைக்கதை முடிந்துள்ளது’

■ ஏ.எம்.ஏ.பரீட், ஒலுமுதீன் கியாஸ், ஹஸ்பர் ஏ ஹலீம், அ.அச்சுதன்

“துமிந்த சில்வாவின் விடுதலை, பல நாள்களாக எழுதப்பட்ட திரைக்கதையாகும். அது தற்போது முடிவுக்கு வந்துள்ளது” என திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்தார்.



துமிந்த சில்வாவின் விடுதலை தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில், “துமிந்த சில்வாவின் விடுதலை பற்றி பலரும் பல கருத்துகளைக் கூறிவருகின்றனர். அவரின் விடுதலை பற்றி ஆச்சரியப்படுவதுக்கு ஒன்றுமில்லை. அவரின் விடுதலை, பல வருடங்களாக எழுதப்பட்டு வந்த திரைக்கதை வசனங்களாகும். அது, இன்று முடிவுக்கு வந்துள்ளது.

“இந்தத் திரைக்கதை, அவருக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட போதே, எழுத ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. நல்லாட்சி அரசாங்கம் கவிழ்க்கப்பட்டதற்கும் அத்திரைக்கதையில் பெரும் பங்குண்டு. அந்தத் திரைக்கதையின் இறுதிப் பகுதியாகவே, பாராளுமன்றத்தில் தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பாக அமைச்சர் நாமல் ராஜபக்‌ஷ உரையாற்றியிருந்தார்.

“அதன்பின்னர், தமிழ் அரசியல் கைதிகளின் முதுகுக்குப் பின்னால் மறைக்கப்பட்டு, துமிந்த சில்வாவும் விடுதலை செய்யப்பட்டுள்ளார்” என்றார்.

# ‘42 வருட காலத்தில் நல்ல ஆரம்பம்’

■ நிதர்ஷன் வினோத்

பயங்கரவாத தடைச் சட்டம் கொண்டு வரப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்ட 42 வருட காலத்தில், இந்தப் பொது மன்னிப்பு ஒரு நல்ல ஆரம்பமாகுமென, தமிழ்த் தேசிய கட்சியின் தலைவர், சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தா தெரிவித்துள்ளார்.

அரசியல் கைதிகள் 16 பேரின் விடுதலை குறித்து, அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே, மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.



அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: இந்தப் பொது மன்னிப்புக்கு பல்வேறு காரணங்கள் இருக்கலாம். ஆனால், பயங்கரவாத தடைச் சட்டத்தால் பாதிக்கப்பட்ட கைதிகளில் சிலருக்காவது விடுதலை கிடைத்துள்ளமையை வரவேற்பதே பொருத்தமாகும்.

16 அரசியல் கைதிகளுக்கு, ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கியிருப்பதை நாம் மனப்பூர்வமாக வரவேற்கின்றோம். இவர்களை விட மேலும் 19 தமிழர்கள் தண்டனைக் கைதிகளாக உள்ளனர். இவர்களில் சிலரின் மேன்முறையீடுகள் நிலுவையில் உள்ளன. இவர்கள் அனைவருக்கும் மன்னிப்பு வழங்கப்பட வேண்டும் என்பதே நீண்ட காலக் கோரிக்கையாக இருந்து வருகின்றது. இந்தக் கைதிகளின் விடயத்தில், குற்றங்கள் வேறுபட்டிருந்தாலும், அவற்றின் பின்னணி ஒன்றேதான். எனவே, இவர்களும் விடுதலை செய்யப்படுவதே நீதியாகும் என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசியல் கைதிகளின் விடுதலை

# ‘நல்ல சமிக்ஞையை காட்டுகின்றது’

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்



அரசியல் கைதிகளின் விடுதலை, ஒரு நல்ல சமிக்ஞையைக் காட்டுவதாகத் தெரிவித்த வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், அரசியல் கைதிகள் இருக்கின்றார்கள் என்பதை, அரசாங்கம் ஒத்துக் கொண்டுள்ளதாகவும் அதன் அடிப்படையிலேயே 16 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள் எனவும் தெரிவித்தார்.

கைதிகளின் விடுதலை தொடர்பாக, அவர் ஊடகங்களுக்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

“இந்த நாட்டில், எமது பூர்வீகம் இல்லாது ஒழிக்கப்படும் சூழ்நிலை இருக்கின்ற நிலையில், அரசியல் கைதிகளை விடுவிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, 16 பேர் விடுவிக்கப்பட்டமைக்கு ஜனாதிபதிக்கு நன்றி கூறிக் கொள்ளுகின்றோம்.

“பல வருடங்களாக சிறையில் இருந்த தமிழ் அரசியல் கைதிகள் சிலர், நீண்ட காலமாக அரசாங்கத்திடம் முன் வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக, விடுதலை செய்யப்பட்டுள்ள விடயம் மகிழ்ச்சியைத் தந்துள்ளது.

“அதேபோன்று, ஏனைய அரசியல் கைதிகளும் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும். அவர்களின் குடும்பங்கள், தனது பிள்ளை, தனது கணவன் விடுதலை செய்யப்படுவர்களா என்ற எதிர்பார்ப்புடன் காத்திருக்கிறார்கள்.

“நல்லாட்சிஅரசாங்கத்தில்கூட அரசியல் கைதிகளின் விடுதலைக்கான நல்ல முயற்சிகள் இடம்பெறவில்லை என்பது கவலை தருகின்றது. பாராளுமன்றத்தில் அமைச்சர் நாமல் ராஜபக்‌ஷ, தனது உரையில் அரசியல் கைதிகள் என்று உச்சரித்து, அதனை ஏற்றுக் கொண்டு உரையாற்றியுள்ளார்.

இதேவேளை, கொலைக் குற்றவாளி என நீதிமன்றால் தீர்ப்பிடப்பட்ட துமிந்த சில்வா விடுதலை செய்யப்பட்டுள்ளார். அவரது விடுதலை தொடர்பில், பெரும்பான்மையின மக்கள் என்ன கருத்துகளைக் கொண்டுள்ளார்கள் என்பதை, மக்கள் உணர்த்த வேண்டும்” என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.







# விடுதலை

ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்ட யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய இடங்களைச் சேர்ந்த தமிழ் அரசியல் கைதிகள், சிறைச்சாலை வாகனத்தில் அழைத்து வரப்பட்டு, உறவினர்களிடம் கையளிக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட புகைப்படங்கள் இவை.
(படப்படிப்பு: எம். றொசாந்த், சுப்ரமணியம் பாஸ்கரன்)

பஞ்சாப்

# ஒருவருக்காக பறந்த விமானம்

ஏயார் இந்தியா என்பது, இந்தியாவின் தேசிய விமான சேவை நிறுவனமாகும்.

இந்நிறுவனத்துக்குச் சொந்தமான விமானமொன்று, பஞ்சாப் மாநிலம் அமிர்தசரஸில் இருந்து ‘எஸ்.பி.சிங் ஓபராய்’ என்பவரை மாத்திரம் சுமந்து கொண்டு, டுபாய்க்குப் பறந்த சுவாரஸ்யமான சம்பவம் அண்மையில் இடம்பெற்றுள்ளது.



தொழிலதிபரான இந்நபர், இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில், “விமானத்தில் ஏறியதும், விமானப் பணியாளர்கள் தவிர, நான் மட்டுமே இருப்பதை அறிந்து ஆச்சரியம் அடைந்தேன். ஒரு மகாராஜாவைப் போல உணர்ந்தேன். எனினும், சக பயணிகள் இல்லாததால், பின்னர் எனக்குச் சலிப்பு ஏற்பட்டு விட்டது. இந்த மூன்று மணிநேரப் பயணத்தை முற்றிலும் அற்புதமான, மறக்க முடியாத பயணமாக மாற்றிய சிறப்பு, ஏயார் இந்தியாவுக்கு மாத்திரமே உரித்தானதாகும். அதற்கு நன்றி” என்றார்.

இது குறித்து, ஏயார் இந்தியா நிறுவனத்தின் கருத்துத் தெரிவிக்கவல்ல அதிகாரி கருத்துத் தெரிவிக்கையில், “ஒருவர் மட்டுமே டுபாய்க்குச் செல்லப் பயணச் சீட்டைப் பெற்றதால் ஆரம்பத்தில், அவரது பயணச் சீட்டை இரத்துச் செய்ய முடிவு செய்தோம். ஆனால், ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தால் அங்கிகரிக்கப்பட்ட தடுப்பூசியைச் செலுத்திக்கொண்டது உட்பட பயணம் தொடர்பான அனைத்து ஆவணங்களும் தன்னிடம் இருப்பதாக அவர் கூறியதையடுத்து, மத்திய விமானப் போக்குவரத்துத் துறையின் தலையீட்டால், அவரை மட்டுமே அழைத்துச் செல்ல முன்வந்தோம்” எனத் தெரிவித்தார்.

மேற்கு வங்கம்

# ‘பா.ஜ.க வைரஸை அகற்றவே கிருமிநாசினி தெளிப்பு’

மேற்கு வங்கத்தில் ஆளும் திரிணாமுல் காங்கிரஸ், பா.ஜ.க ஆகிய கட்சிகளுக்கு இடையே கடுமையான அரசியல் மோதல் நிலவி வருகின்றது.

இந்நிலையில், பா.ஜ.க விலிருந்து விலகி திரிணாமுல் காங்கிரஸ் கட்சியில் இணைந்து கொண்ட 150க்கும் மேற்பட்டோருக்கு கிருமிநாசினி தெளிக்கப்பட்டுள்ளது.



இது தொடர்பாக திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் உள்ளூர் தலைவர்கள் கூறுகையில், “பா. ஜ.கவிலிருந்து விலகிய அவர்கள் அனைவருக்குள்ளும் பா.ஜ.க என்னும் வைரஸ் இருக்கும். அதை அகற்றும் விதமாகவே கிருமிநாசினி தெளிக்கப்பட்டு தூய்மைப்படுத்தப்பட்டனர்” எனத் தெரிவித்தனர்.

இது குறித்து வெளியான வீடியோ, சமூக வலைத்தளங்களில் தற்போது வைரலாகி வருகின்றது.

இதேவேளை, மேற்கு வங்கத்தின் ஹூக்ளி மாவட்டத்தில் 200க்கும் மேற்பட்டோர் பா.ஜ.கவில் இருந்து விலகி மீண்டும் திரிணாமுல் காங்கிரஸில் இணைந்தனர்.

அப்போது அவர்கள், மொட்டையடித்து கங்கையில் குளித்து, தங்களைச் சுத்தப்படுத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

கேரளா

வரதட்சணைக் கொடுமை:

# கேரளாவை உலுக்கிய இளம் பெண்களின் மரணம்




கேரளாவில் இளம் பெண் ஒருவர் வரதட்சணைக் கொடுமையால் மரணித்துள்ள சம்பவமொன்று, அப்பகுதியில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

கொல்லத்தைச் சேர்ந்த ஆயுர்வேத மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சை இளங்கலை மாணவியான 22 வயதுடைய விஸ்மயா நாயரே இவ்வாறு மரணித்துள்ளார். தனது கணவர் கிரண்குமார் வீட்டில் மர்மமான முறையில் மரணித்துள்ள விஸ்மயாவின் மரணம் ஆரம்பத்தில் தற்கொலை எனக் கூறப்பட்டாலும், அவர் கொலை செய்யப்பட்டு இருக்கலாம் என்ற கருத்து சமூக ஊடகங்களில் விவாதங்களையும் விமர்சனங்களையும் ஏற்படுத்தியுள்ளன.

இங்கிலாந்துக்கெதிரான

# தொடரை இழந்தது இலங்கை



இங்கிலாந்துக்கு எதிரான இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டித் தொடரை இலங்கை இழந்துள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் நேற்று முன்தினமிரவு இரண்டாவது போட்டியிலும் தோல்வியடைந்தமையைத் தொடர்ந்தே இன்னும் ஒரு போட்டி இருக்கத் தக்கதாகவே தொடரை இலங்கை இழந்துள்ளது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணியின் தலைவர் குசல் பெரேரா, தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.

இலங்கை சார்பாக கடந்த போட்டியில் விளையாடிய தனஞ்சய டி சில்வா, நுவான் பிரதீப்பை நிரோஷன் டிக்வெல்ல, பினுர பெர்ணான்டோ ஆகியோர் பிரதியிட்டிருந்தனர்,

இந்நிலையில், முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இலங்கை, ஆரம்பம் முதலே வரிசையாக சாம் கர்ரன் (1), அடில் ரஷீட் (2), மார்க் வூட் (2), கிறிஸ் ஜோர்டானிடம் (1) விக்கெட்டுகளைப் பறிகொடுத்து, 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 111 ஓட்டங்களையே பெற்றது. துடுப்பாட்டத்தில், குசல் மென்டிஸ் 39 (39), இசுரு உதான ஆட்டமிழக்காமல் 19 (14) ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு, 112 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து, 12 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 69 ஓட்டங்களைப் பெற்றவாறு காணப்பட்டிருந்தது.

பின்னர் டக்வேர்த் லூயிஸ் ஸ்டேர்ண் முறைப்படி 18 ஓவர்களில் 103 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நிர்ணயிக்கப்பட்ட நிலையில், 16.1 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்த நிலையில் இங்கிலாந்து வெற்றியிலக்கையடைந்தது.

கோப்பா அமெரிக்கா தொடர்:

# பராகுவேயிடம் தோற்ற சிலி

பிரேஸிலில் நடைபெற்று வரும் கோப்பா அமெரிக்கா தொடரில், நேற்று அதிகாலை நடைபெற்ற பராகுவே உடனான போட்டியில், 0-2 என்ற கோல் கணக்கில் சிலி தோற்றது. பராகுவே சார்பாக, பிரையன் சமுடியோ, மிகேல் அல்மிரோன் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இப்போட்டியில் வென்றதன் மூலம் காலிறுதிப் போட்டிக்கு பராகுவே தகுதி பெற்றுள்ளது.

இதேவேளை, பொலிவியாவை 2-0 என்ற கோல் கணக்கில் வென்ற உருகுவேயும் காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது. உருகுவே சார்பாக, எடின்சன் கவானி ஒரு கோலைப் பெற்றதோடு, மற்றைய கோல் ஓவ்ண் கோல் முறையில் பெறப்பட்டிருந்தது.



இந்நிலையில், இன்னும் ஒரு குழு நிலைப் போட்டி மீதமிருக்கையிலேயே, குழுப் போட்டிகளுடன் பொலிவியா தொடரிலிருந்து வெளியேறுவது உறுதியாகியுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் சனிக்கிழமை, 26 ஜூன் 2021, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.